513

ஸ்ரீ பர்வத வர்த்தனி

ஆசிரியர் : V. M. நடேச நாட்டார்

513/ப

மலர் 2 | ஹேவிளம்பி ஐப்பசித் திங்கள் அக்டோபர் 1957 | இதழ் 2

பொருளடக்கம்		பக்கம்
1.	சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு ...	33
2.	வைத்தியம் ...	34
3.	கடமையும் காதலும் ...	37
4.	திருக்குறள் ...	41
5.	இன்ப வாழ்க்கை ...	43
6.	"நீலச் சுழலழகி" ...	46
7.	பரமன் பண்பாளன் அல்லன் ! ...	53
8.	எந்த நாளோ ? ...	55
9.	யார் பெற்ற செல்வம் ...	55
10.	தேசிங்கு ராஜன் ...	60

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - NOV 1957
MADRAS

சென்னை ராஜ்ய
வதராஜகுல சங்க
மாத வெளியீடு

25 விலை அணு 4

SL
2811, N56
N57·2·2
187257

உ

பராசக்தி துணை

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வதவர்த்தனி

" எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 2	ஹேவிளம்பி ஐப்பசித் திங்கள் அக்டோபர் 1957	இதழ் 2

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

பேரன்புமிக்க பெரியோர்களே!

நம்மவர்க்கென ஒரு பத்திரிகை "பர்வதவர்த்தனி" ஆரம்பித்து ஒருவருடம் முடிந்துவிட்டது. 600 காப்பிகளே அச்சிட்டு அனுப்புகின்றனம். அதிலும் பிரதி மாதமும் பத்திரிகை வேண்டாமெனத் திருப்பும் அன்பர்கள் பலர். அதோடு சந்தா அனுப்புங்கள் எனக் கேட்டால் பத்திரிகை வேண்டாமென்றும், காதல், சினிமா முதலிய பகுதிகள் இல்லையென்றும் திருப்புகின்றனர் பலர். உண்மையிலே நம்குலத்திற்கு ஓர் பத்திரிகை வேண்டுவது அவசியமென நமது வெள்ளிவிழா மாநாட்டில் பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்கி மறுமுறையும் இம்மாதப் பத்திரிகை ஆரம்பித்துள்ளோம். இப்பத்திரிகை எல்லா ஊர் பொது விஷயங்களையும், சங்க விஷயங்களையும் அறியவும், நம் குலத்திற்கு அரசியலார் செய்யும், நன்மை தீமைகளை அறியவும், ஓர் பெரும் பொக்கிஷமாயிருக்கின்றது என்று சொல்வதில் ஐயமில்லை. உண்மையிலேயே 50,000. மக்கள் கொண்ட நமது குலப்பெரியார்கள் இருந்தும், 600 காப்பிதான் வெளியிடுவது என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமட்டுமல்ல; எவ்வளவு தூரம் நமது குலமக்களின் ஒற்றுமையைக் காட்டுகின்றது என்பதும் நன்கு அறியும் விஷயமாகும்.

தவிர இப்பொழுது இருக்கும் 600 சந்தாதாரர் களிலும் 200 சந்தாக்கள்தான் ஆரம்ப வருடத்தில் வசூலாயிருக்கின்றன எனச்சொல்வது அதிலும் வருந்தத்தக்க விஷயம் என்று சொல்வது மிகை யாகாது.

நமது குலத்தில் பெருவாரியான வியாபாரிகள் உள்ளனர். அவர்களாகிலும் தங்கள் விளம்பரங்களைக் கொடுத்து நம் குலப் பத்திரிகையை ஆதரிப்பது கிடை யாது. பிரதிமாதமும் வருட சந்தா அனுப்புங்கள் என்று கூப்பாடுபோடாத நாளேகிடையாது. ஆதலால் பாக்கிதாரர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதவோ அல்லது புத்தகத்தில் அவரவர்கள் பெயர்களை வெளியிடவோ முடியாத காரியமாதலால் குலாபிமானிகள் யாவரும் இரண்டாவது ஆண்டு ஆரம்பித்து 2 சஞ்சிகையும் வெளிவந்து விட்டபடியால் உடனே அவரவர்கள் சென்ற வருட பாக்கியோடு இவ்வருட சந்தாவையும், சேர்த்து அனுப்பிவைக்கு மாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதோடு சென்ற வருட சந்தா அனுப்பிவிட்டவர்கள் 2-வது ஆண்டு சந்தாவை அனுப்பி விடும்படியும் கேட்டுக்கொள்ளு கின்றனம்.

ஆசிரியர்.

---(o)---

வைத்தியம்

துளசி செடி

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்

[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]

தமிழ் நாட்டிலே துளசி செடியைப் பற்றி அறியாதார் யாரும் இருக்கவே மாட்டார்களென்பது நிச்சயம். தமிழ் நாட்டில் இருக்கப்பட்ட சமயங்கள் ஆறு. அதாவது சூரியனைக் கும்பிடு வதும், சக்தியைக் கும்பிடுவதும், விஷ்ணுவைக் கும்பிடுவதும், சிவத்தைக் கும்பிடுவதும், கணபதியைக் கும்பிடுவதும், முருகனைக் கும்பிடுவதும். ஆக ஆறு அகச்சமயங்களாகும்.

இந்த ஆறும் சைவம் வைணவமென்ற இரண்டினுள் அடங் கும். எல்லாம் முடிவில் ஒன்ருயினும் வைணவர்கள் துளசியை முக்கியமாகக் கொண்டனர்.

18725

துளசி பெருமாளுக்குப் பிரீதியென்றும். லட்சுமி வாசம் என்றும் கொண்டனர். சிறு தெய்வ வழிபாடுடைய சில தமிழர்கள் பொதுவாக வேப்பிலையைக் கொண்டனர்.



நம் தமிழ் நாட்டில் துளசி, வில்வம், வேம்பு இந்த மூன்றையும் பற்றி பலபடியாக நூல்கள் கூறுவதோடு அநுபவமு மிருக்கிறது. இம்மூன்றையும் முறையாக ஒவ்வொரு மண்டலம் சாப்பிட்டுத் தீராத வியாதியும் குணம் அடைந்த அநுபவமிருக்கிறது. இதற்கு நம்பிக்கையும் மனவுறுதியும் வேண்டும்.

துளசியில் லட்சுமி இருக்கிறாளென்று தமிழ் மக்கள் துளசி செடியைப் பூசை செய்வதற்குத் துளசிமாடம் என்று ஒரு சிறு கட்டிடம் கட்டி பூசை செய்வாராயினர். அந்தத் துளசி மாடமும் நடு முற்றத்தில் அதாவது நடுவாசலில் வைக்கப்பெற்றிருப்பது அதன் காற்று எங்கும் வீசி நலன் தருவதற்காகும்.

லட்சுமி கடாட்சம் என்றால் செல்வமாக வாழ்வதாகும். நோயற்ற வாழ்வுதானே சிறந்தது. எவ்வளவு பணம் இருந்தும் உடம்பில் ஒரு நோய் இருந்தால் என்ன சுகமிருக்கிறது?

நோய்களில் பொல்லாதது கொள்ளைநோய். கொள்ளைநோய் என்றால் காலரா, பிளேக், அம்மை முதலிய கொடும் நோய்களாகும். அதனை முதலில் துளசி தடுக்கிறது. துளசியின் வாடை பட்டாலும் காலரா, அம்மை கிருமிகள் நசிந்துவிடும்.

மேலும் துளசி காற்று சஞ்சீவிபோன்றது. அது விஷயமாக ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். ஒரு துளசி தோட்டத்தில் ஒரு நாயை யாரோ அடித்துப் போட்டுவிட்டார்கள். அந்த வழியே சென்ற ஆங்கில வைத்திய நிபுணர் ஒருவர் இறந்து கிடக்கும் நாயைக் கண்டார். அது அடிபட்டு இறந்திருந்தாலும் உறங்குவதுபோல் தோன்றிற்று. அவர் நாயின் அருகே வந்து பார்த்தார். இறந்து பல நாளாகியும் கெடாமல் நாற்றம் வீசாமல் இருப்பதற்குக் காரணமென்னவென்று யூகித்தறிய ஆரம்பித்தார்.

அதன்பின் அதற்குவேண்டிய பரீட்சை கருவிகளோடு பார்க்கும்போது இந்தத் துளசியின் காற்றுச் சஞ்சீவிபோல உடலைக் கெடுக்காமல் காப்பாற்றி வைத்திருந்ததென்று கண்டுபிடித்த உண்மை பத்திரிகையின் மூலம் தெரிந்தேயாகும்.

வெண்பா

"ஐயம் வயிறுளைச்ச லஸ்திசுரந் தாகமும்போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண்—மெய்யாக

வாயின் அரோசிகம்போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்''

துளசி இலையில் பச்சை நிறமாக இருப்பது ஒன்று, கொஞ்சம் ஊதாபோன்று கருமையாக இருப்பது ஒன்று ஆக இரண்டு தான் பலருக்குத் தெரியும். இதனை லட்சுமி துளசி என்றும் விஷ்ணு துளசியென்றும் கூறுவர்.

ஆனால் துளசியில் செந்துளசி, கருந்துளசி, நிலத்துளசி, நாய்த் துளசி, கல்துளசி. முள்துளசி என்று பலவகைகளுண்டு. எல்லாத் துளசியும் மொத்தத்தில் உடலுக்கு நன்மைதான் செய்கிறது. பொதுவாக கார்ப்பும் வெப்பமும் உள்ள துளசியினால் கபதோஷம், வயிறுளைச்சல், அஸ்திதாது, கதஜுரம், அரோசிகம் நீங்கும்.

செந்துளசி :—விஷம். கபாதிக்கம், அக்னிகிடவிஷம், திரி தோஷத்தால் சனிக்கின்ற பற்பல ரோகங்கள் நீங்கும்.

கருந்துளசி :—காசம், தொண்டைக்குள் குறுகுறு என்னும் சத்தம், இரைப்பு, கிருமி, நீர்கோவை, இருமலால் வருங்கேவல், மார்சலி, சுரம், குத்தல், விஷம், சந்நிபாதம் இவைகள் நீங்கும்.

நாய்த்துளசி :—கோழை, திரிதோஷம், பொடிஇருமல் முதலி யன நீங்கும்.

கற்றுளசி :—தீச்சுரம், வித்திரிகட்டி, நீர்வண்டு முதலிய் சில விஷம், கோழையைத் தள்ளுகின்ற கபகாசம் நீங்கும்.

முள்துளசி:—வெட்டுப்புண், எலி விஷம், அடிப்பட்ட காயம், அற்ப விஷம் நீங்கும்.

விஷ்ணு ஆலயங்களுக்குச் சென்றால் துளசி தீர்த்தம் கொடுப் பதும் ஏகாதசி விரத காலத்தில் துளசி தீர்த்தம் சாப்பிடுவதும், நமது தமிழன் எவ்வளவு வைத்திய நுட்பம் அறிந்து தெய்வத் தோடு ஆசாரத்தோடு கூட்டி வைத்திருக்கிறான் என்பதனைச் சிந்திக்க தமிழ் மக்களின் பெருமை மேன்மேலும் விளங்குகிறது.

மேலும் சிறு குழந்தைகட்கு இந்தத் துளசி ரசத்தோடு தேன் கலந்துகொடுக்க கபரோகம், இருமல், சிறு ஜுரம் முதலியன நீங்கிவிடும். அப்படிச் செய்துகொண்டு வந்ததால் (Toncel) தொண்டையில் சதை வளருதல் என்னும் வியாதி உண்டாக மாட்டாது.

பாடகர்கள் தொண்டைக் கம்மலுக்குத் துளசியும் மிளகும் சேர்த்துக் காலையில் 2, 3 நாள் சாப்பிட தொண்டைக் கம்மல் நீங்கி குணமடைவதை இன்றும் அனுபவத்தில் நாம் பார்க்கின்றோம்.

துளசியைப் பச்சை இலையாக ஐந்து அல்லது ஆறு இதழ்களைத் தின்னலாம். துளசியைக் கசக்கி ரசம் பிழிந்து தேன் கலந்து சாப்பிடலாம். துளசியை இடித்துப் பிட்டுவைத்துப் பிறகு ரச மெடுத்து அதனோடு தேன் கலந்து சாப்பிடலாம்.

அன்றியும் துளசியை நிழலிலே உலர்த்தித் தூள் செய்து கொண்டு சர்க்கரை கலந்து சாப்பிடலாம். துளசி இலேயோடு மிளகும் சிறிது பூங்காவியும் சேர்த்து அரைத்து மாத்திரையாக மிளகு பிரமாணம் செய்துகொண்டு குழந்தைகளின் வயதிற்கும் நோய்க்கும் தக்கவாறு மிகலேசான இருமல், மார்சளி, சுரம், சீதளம் முதலியவற்றிற்கு இஞ்சி ரசத்தில், வெற்றிலே ரசத்தில், தேனில், முலேப்பாலில் கொடுக்கப் பூரண குணமடையும். மாத்திரை ஒன்று அல்லது இரண்டு கொடுக்கலாம்.

தொண்டை கம்மலுக்கு வெற்றிலே பாக்கோடு சேர்த்துப் போட்டுக் கொள்ளலாம். மாத்திரை வாசனையாக இருக்க பச்சை கர்ப்பூரம் சிறிதுசேர்த்து அரைத்துக்கொள்ளலாம். இந்த மாத்திரையினல் யாதும் கெடுதிகிடையாது.

ஒரு நோய் சௌக்கியமாக மருந்து சாப்பிட்டால் அது வேறு கெடுதலாக காது மந்தப்படுவது, பித்தம் அதிகரிப்பது, நரம்பு தளர்வது போன்ற வியாதிகளே இந்தத் தமிழ் மருந்து உண்டாக்காது.

இவைகளே எல்லாம் முற்றிலும் விவரமாக எழுதுவதென்றல் இயலாத காரியம். குழந்தை முதல் பெரியவர்கள் வரை துளசியை வேண்டும்போது சாப்பிடுவது நல்லது.

அதன் காற்றுப்பட்டால் நல்லது. அது வீட்டிலிருந்தால் நல்லது. அதனேப் பூசைக்குப் பத்திரமாகக் கொண்டால் நல்லது. அதனே ஜலத்தில்போட்டுச் சிறிது நேரம் பொறுத்து அந்த ஜலத்தைச் சாப்பிட்டால் நல்லது. எல்லா வகையிலும் துளசி நல்லதென்று நம்பலாம்.

——o——

கடமையும் காதலும்

(புலிசை - திரு. மொ. நாராயணன்)

களம் 5

இடம் :—குடிசை வீடு
காலம் :—காலே
இருப்போர் :—சோமுநாத், பிரபாகர், கலா.

[கலா அறையின் உள்ளே பிரசவ வேதனேப்படுதல். சோமுநாத் இங்குமங்கும் உலாவிக் கொண்டிருத்தல்.]

கலா :—அப்பா . . . . ஐயோ . . . . ஐயோ
உம் . . . . . . உம் . . . . . , உம் . . . . . . அப்பா
அப்பா . . . . , . உம் , , ... உம் . . . . . . ஐரோ
ஐயோ . , ... உம் . . . . . . அப்பா.

[சோமுநாத் உலவிக்கொண்டிருத்தல். பிரபாகர் உட்கார்ந்திருக்கிருன். சிறிது நேரத்திற்குப் பிறகு குழந்தை அழும் சப்

தம் கேட்கிறது. உள்ளே இருந்து ஒரு தாதி வெளியே வந்து]

தாதி :—தம்பி உனக்கு மகள் பிறந்திருக்கிருள். மனைவி உயிருக்குச் சேதமில்லை, பார்த்துக் கொள்ளுங்கள். இதோ வருகிறேன்.

சோமு :—(ஆச்சரியத்துடன்) என்ன! பெண் குழந்தையா? டேய் பிரபாக்கர் உனக்குத் தங்கை பிறந்துவிட்டாளடா! தங்கை பிறந்து விட்டாள்!

பிரபாகர் :—எனக்குத் தங்கையா?

சோமு :—ஆம் உனக்குத் தங்கை. அதுசரி. உன் தங்கைக்கு என்ன பெயர் வைப்பது ...... ஹூம்.

பிர :—"உஷா"

சோமு "உஷா" நல்ல பெயர், உன் தங்கைக்கு ஏற்ற பெயர்.

[சோமுநாத் தன் மகன் பிரபாகரைக் கட்டியணைத்துக்கொண்டு முத்தமிடுகின்றார்.]

களம் 6

இடம் :—குடிசை வீடு
காலம் :—காலை
இருப்போர் :—சோமுநாத், உஷா, கலா, பிரபாகர்.

பிர :—அம்மா! அம்மா! தங்கையை உட்கார வை அம்மா. நான் தங்கையிடம் விளையாடப் போகிறேன்.

[கலா தன் இடுப்பில் உள்ள குழந்தையைக் கீழே உட்கார வைக்கிருள்]

கலா :—டேய் பிராபகர்! அதோ இருக்கிறதே அந்தப் பொம்மையை எடுத்துக்கொண்டு வந்து உஷாவிடம் கொடு?

[கலா பொம்மையைச் சுட்டிக்காட்டுதல். பிரபாகர் பெம்மையை எடுத்துக் கொண்டுவந்து உஷாவிடம் கொடுக்கிருன்.]

பிர :—அம்மா! அப்பா எங்கே போயிருக்காரு?

கலா :—அப்பாவா? என்னிடம்கூடச் சொல்லாமல் எங்கேயோ போயிருக்காருடா கண்ணு.

[சோமுநாத் ஏராளமான விளையாட்டுச் சாமான்களுடன் வருதல்,]

சோ :—இதோ வந்துட்டேண்டா கண்ணு. இதோ வந்துட்டேன்.

[சோமுநாத்திடம் உள்ள சாமான்களைப் பிரபாகர் குழந்தைக்கு வாங்கிக் கொடுத்தல். எல்லோருக்கும் சந்தோஷம் நிலவுதல். இதற்கிடையில் சோமுநாத் குழந்தையிடம்.]

சோ :—உஷா! இதோ பார். சிங்கம், புலி, கரடி. யானை எல்லாம் உனக்குத்தான் வாங்கிட்டு வந்தேன் உஷா.

பிர :—(குறுக்கிட்டு) எனக்கு இல்லையா அப்பா ?

சோ :—உனக்கும்தான்டா கண்ணு. குழந்தையிடம் விளையாட்டாகச் சொன்னேன் அப்படி. அதற்குள் அழ ஆரம்பிக்கிறாய். கலா! எனக்குப் பசி எடுக்கிறது கலா. ஏதாவது இருந்தால் எடுத்துக் கொண்டுவா கலா ?

[கலா உள்ளே போதல்.]

10 வருடங்களுக்குப் பின்

களம் 7

இடம் :—நந்தவனம்

காலம் :—காலை

இருப்போர் :—பிரபாகர், உஷா.

[உஷாவும் பிரபாகரும் பாடிக்கொண்டு செல்லுகின்றனர்.]

உஷா :—இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும் அண்ணா ?

பிர :—அதோ தெரிகிறது பார் உஷா ஒரு அரசமரம். (சுட்டிக்காட்டுதல்) அங்குதான் செல்லவேண்டும். நாமிருக்குமிடம் வீட்டிலிருந்து ஒரு கல் தொலைவுதான் இருக்கும். இந்த ஒரு கல் தூரத்தை உன்னால் நடக்க முடியவில்லையே. சோம்பேரித்தனம் உன்னிடம் அதிகமாக இருக்கிறது உஷா.

உ :—அப்படியே இவர்மட்டும் நடந்துடுவாரு......ஹும் ஹு (அழுதுகொண்டே) இரு இரு, உன்னை அம்மாவிடம் போய்ச் சொல்லுகிறேன்.

பிர :-(பரபரப்புடன்) உஷா! அதுமட்டும் செய்யாதே வேறெதுவேண்டுமானாலும் செய். உன்னைத் தூக்கிக்கொண்டு போகச் சொல்லுகிறாயா ? அதையும் செய்கிறேன். அம்மாவிடம் போய்ச் சொல்லாதே உஷா ? நீ போய்ச் சொன்னாயானால் நான் உன்னிடம் பேசமாட்டேன்.

உ :—இல்லேண்ணா! இனிமேல் நான் சொல்லமாட்டேண்ணா. தெரியாம சொல்லிவிட்டேண்ணா. மன்னித்துவிடண்ணா.

பிர .—சரிசரி. வா உஷா போகலாம்.

உ :—சரி அண்ணா.

[இருவரும் போதல்.]

களம் 8

இடம் :—நந்தவனம்

காலம் :—காலை

இருப்போர் :—பிரதாப். மனோகர்.

[பிரதாபும் மனோகரும் பாடிக்கொண்டு செல்லுகின்றனர்.]

மனோகர் :—(பதுமையைக் காட்டி) பிரதாப் இதைப் பார்த்தாயா?

பிரதாப் :—என்ன அது? பதுமைதானே.

மனோ :—ஆம்! [பதுமைதான்!] சாதாரணப் பதுமை அல்ல. தெய்வத்தன்மை வாய்ந்த பதுமை. நாம் செய்ய நினைக்கும் எல்லா காரியங்களையும், இதனால் செய்து விட முடியும்.

பிர :—தெய்வத்தன்மை என்று என் தந்தையிடம் சொன்னால் அவர் என்ன சொல்வார் தெரியுமா?

மனோ :—என்ன சொல்வார்?

பிர :—மனித சக்தியின்றி எதுவும் ஆகவில்லை; இது எப்படி தெய்வத்தன்மை வாய்ந்ததாக இருக்கமுடியும் என்பார். அது மட்டுமல்ல. கோவிலுக்குச் சென்றால். ஏனடா கோவிலுக்குச் சென்றாய்? உனக்கு மனக்கோவில் இல்லையோ? அக்கோவிலில் தெய்வத்தை வைத்துப் பூசை செய். மற்றும், காதலனும் காதலியும் தனியாகச் சந்தித்துப் பேசுவதற்குத்தான் கோவில் கட்டினராம் என்று சொல்வார்.

மனோ :—ஏதேது! பெரிய புரட்டிக்காரரோ உன் தந்தை?

பிர :—ஆம் மனோகர் புரட்சிக்காரர்தான், இப்படிப் பேசிக் கொண்டே இருந்தால் நாம் உணவுக்கு என்ன செய்வது? வா வா.

மனோ :—சரி, பிரதாப்.

[இருவரும் வேகமாகச் செல்லுதல்.]

——(o)——

திருக்குறள்

வித்வான் K. N.

அடக்க முடைமை

13-ம் அதிகாரம்

அஃதாவது காயமும், வாக்கும், மனமும் தீய வழியியே செல்லாமல் அடங்குதல் உடையனுய் இருத்தல். இது பிறருடைய குற்றத்தைப்போலத் தன் குற்றத்தையும், காணும் நடுவு நிலைமையுடையவனுக்கு உரித்தாதலால் நடுவு நிலைமை என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

திருவள்ளுவர்

காயம், வாக்கு இவைகளை அடக்குவதால் இம்மைப் பயனும், மனத்தை அடக்குவதால் இம்மை மறுமைப் பயனும் உண்டாம்.

1. ஒருவனை அடக்கமாகிய அறமானது தேவர் உலகத்தில் கொண்டுபோய்விடும்; அடங்காமையாகிய பாவமானதுபொறுத்துக் கொள்வதற்கு அரிய நரகத்தில் கொண்டுபோய்விடும்.

2. உயிருக்கு அடக்கத்தினும் மேற்பட்ட செல்வமானது வேறு இல்லை ஆதலால் அடக்கத்தை உறுதிப் பொருளாகக் காக்கக்கடவன்.

அறிந்து அடங்கிப் பயன் அடைவது மனிதருயிரே யாதலால் இங்கு உயிரென்றது மனிதருயிரைக் காட்டி நின்றது.

3. அடங்குதலே நமக்கு அறிவாவது என்று அறிந்து நல்ல வழியில் ஒருவன் அடங்கப் பெற்ருல் அவ்வடக்கமானது நல்லோரால் அறியப்பட்டு மேம்பாட்டை அவனுக்குத் தரும்.

இல்வாழ்வானுக்கு அடங்கும் வழியாவது காயமும் வாக்கும் மனமும் அவன் வசப்படுதல்.

4. இல்வாழ்க்கையாகிய தன் வழியில் ஐம்பொறிகளாலும் ஐம்புலன்களையும் அனுபவித்துக்கொண்டிருந்தே அடங்கினவனது உயர்ச்சியானது மலையின் உயர்ச்சியினும் மிகப் பெரியதாம்.

5. பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்பும் உடையார் அப்பெருமிதம் இன்றி கல்வி குடிப்பிறப்புக்களாலே

அடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும் அவ்வெல்லாருள்ளும் அடங்குதல் செல்வமுடையவர்க்கே வேறொரு செல்வமாய்த் தோன்றுஞ் சிறப்பினையுடையதாம்.

இதனால் செல்வமுடையவர்கள் அவசியம் அடங்கியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இவை ஐந்து பாட்டானும் பொதுவகையால் அடக்கத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

6. ஆமை ஐந்து உறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்கவல்லவனாயின் அவ்வல்லமை அவனுக்கு ஏழு பிறப்பின்கண்ணும் காவலாதலை உடையதாம்.

ஆமையின் ஐந்து உறுப்புகள்—கால்கள் நான்கும் தலையொன்றும் ஆகும். ஐம்பொறிகள்–மெய், வாய் கண், மூக்கு, செவி. இதனால் மெய் அடக்கம் கூறப்பட்டது.

7. தம்மால் காக்க வேண்டுமவை யாவையும் காக்க மாட்டாராயினும் நா வொன்றையும் காக்கக்கடவர்; அந்நாவைக் காவாராயின் சொல்லினிடத்துத் தோன்றுங் குற்றத்திலே அகப்பட்டுத் தாமே துன்பப்படுவர்.

8. தீங்கு பயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல் முதலிய சொற்களின் பொருள்களால் பிறருக்கு வரும் துன்பம் ஒன்றாயினும் ஒருவனிடத்திலே உண்டாவதாயின் அவனுக்குப் பிற அறங்களாலுண்டாகிய நன்மையானது தீதாய்விடும்.

இதனால் ஒருவன் கடுஞ்சொற்களைச் சொல்லுவானாயின் அச்சொற்கள் அவனது நன்மையனைத்தையுங் கெடுக்கும் என்பது பெறப்படும்.

9. ஒருவனை ஒருவன் தீயினால் சுட்ட புண்ணானது உடம்பினிடத்தே இருந்தாலும் மனதினிடத்தே அப்போதே ஆறும்; அப்படியல்லாமல் தீயசொற்களையுடைய நாவினாலே சுட்டவடுவானது அதனிடத்தும் எப்போதும் ஆறாது.

ஆறிப்போதலால் தீயினால் சுட்டதனைப் புண் என்றும், ஆறாமையால் நாவினால் சுட்டதனை வடு என்றுங் கூறினார்.

10. கோபத்தை மனதிலே தோன்றாமல் காத்து கல்வியுடையவனாகி அடங்குதலில் வல்லவனாயிருப்பவனது சமயத்தை அறக்கடவுளானவன் அவனைச் சாரும் வழியிலேசென்று பார்த்துக் கொண்டிருப்பான்.

அடங்குதலாவது மனம் புறத்திலே பரவாமல் அறத்திலே நிற்றல். இப்படிப்பட்டவனை அறக்கடவுள் தானேசென்று அடைவான் என்பதாம். இதனாலே மனவடக்கம் சொல்லப்பட்டது.

——(o)——

இன்பவாழ்க்கை

திருமண விருந்து

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்
(75, நைனியப்பன் தெரு, சென்னை-1)

இன்ப வாழ்க்கைக்குப் பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துகொண்டதும் கலியாண விருந்தாக மாப்பிள்ளை மாமியார் வீட்டிற்குச்சென்று விருந்து சாப்பிடும் வழக்கம் தமிழ் நாட்டில் இன்றும் இருந்துவருகிறது. அதன் காரணம் என்னவென்று சிறிது ஆராய்வாம்.

கலியாணப் பிள்ளையை முதன் முதலில் ஒரு சிறிதுதான் அறிந் திருக்க முடியும். மருவாக சில நாள் விருந்தளிக்கும்போது மாப் பிள்ளையின் குணங்கள், அறிவு, கல்வியின் நுண்ணறிவு, உலக அநு பவம், துப்பறியும் திறமை, ஆளுந்தன்மை எல்லாம் இருக்கிறதா என்று கண்டறிய மைத்துனன் மைத்துனிமார்கள் வேடிக்கையாக வும் பரிகாசமாகவும் விளையாட்டாகவும் பல விஷயங்கள் செய்து மாப்பிள்ளையின் திறமையைக் கண்டறிவார்கள்.

அதற்காகவே மாப்பிள்ளையோடு பழக்கமான ஒருவரைத் தோழிமாப்பிள்ளை யென்று உடன்கூட்டி அனுப்புவது உண்டு. அஃது எதற்கென்றால் மாப்பிள்ளைக்குச் செய்யும் விளையாட்டுச் சூழ்ச்சியில் ஏமாந்து போகாவண்ணம் அதையறிந்து மாப் பிள்ளைக்குச் சொல்லுவதற்காக அனுப்பும் வழக்கம் இன்றும் இருந்துவருகிறது. மாப்பிள்ளைக்கு அறிவும் ஆற்றலும் இருந்தா லும் இன்னின்ன காரியத்தில் இப்படி இப்படித்தான் செய்து ஏமாற்றுவார்களென்று பழக்கம் தெரியாமையால் அதனை அவ்வப் போது தோழிமாப்பிள்ளை குறிப்பாலுணர்த்துவான். விளையாட் டுச் சொற்களிலே மாப்பிள்ளை சோர்வுபடும்போது தாழ்வுபடாமல் பிறரைக் குறைத்துத் திட்டாமல் கண்ணியமாக மாப்பிள்ளைக்கு ஏற்றம்கொடுத்துப் பேசுவான்.

உண்ணும் உணவில் வடை முதலிய வஸ்துக்களில் புளியங் கொட்டை முதலியதும் வைத்துச் சுட்டு இடுவார்கள். அதைக் குறிப்பறியவேண்டும். குடிக்கும் தண்ணீரில் அரிசி கழுவின நீரைக் கலந்துகொடுப்பார்கள். நீரைக் குடிக்கும் காலத்துப் பார்த் துச் சாப்பிடுகிற வழக்கம் இருக்கின்றதா? நாக்கு ருசி அறியுந் தன்மை இருக்கிறதா என்பது புரிந்துவிடும்.

தாம்பூலம் போடும்போது வெற்றிலைக்குப் பதிலாக வெற்றிலை வள்ளி இலையும், பாக்குக்குப் பதிலாக புளியங்கொட்டையில்

செய்த செயற்கை (Artificial) பாக்கும் சுண்ணும்புக்குப் பதிலாக நாமக்கட்டிச் சாந்தும் வைப்பார்கள். அதனைப்பார்த்து இது வெற்றிலை அல்லவென்று அறிந்துகொள்ளக்கூடிய இலைகளின் பழக்கம் இருக்கவேண்டும். ஆனால் இப்போது பட்டதாரிகளுக்கு என்ன சொல்லமுடியும்? எந்தக் கீரை சமைத்தாலும் அகத்திக் கீரை என்று சொல்லும் உத்தியோகஸ்தர்களுக்கு என்ன சொல்ல முடியும்? சுக்குக் குழம்பென்றும் கடுகு குழம்பென்றும் அறிய முடியாத வியாபாரி மகனுக்கு என்ன சொல்லமுடியும்? சமைத்த கறிகளை இன்னதென்று அறியாமலேயே சாப்பிடும் பேச்சாளருக்கு என்ன சொல்லமுடியும்? இப்படி எத்தனையோ இருக்கிறது.

பார்க்கும்போதே இது இயற்கை, இது செயற்கையாகச் செய்தது என்றறியவேண்டும். அவ்வாறே சுண்ணும்பின் நிறமும் அதன் பசையும், நாமக்கட்டியின் நிறமும் பசையும் கண்டு அறிந்துகொள்ளும் ஆற்றலிருக்கவேண்டும். அதனை அறிந்து செய்யும் ஆற்றலினால் மாப்பிள்ளைக்கு ஏற்றம் ஏற்படும். படுக்கும் போது அல்லது பகற்பொழுதில் இருக்கும்போது அதாவது உட்காரும்போது பாயின் தலை, வாலை மாற்றிப்போடுவதும் செய்வார்கள். அதனை அறிந்து திருத்தி உட்கார்ந்தால் குடும்ப அநுபவம் இருக்கின்றதென்று அறிந்துகொள்ள முடியும்.

அப்படியே சயன அறையில் பாயலில் அதாவது படுக்கையில் தலையணை முதலியதும் தலைமாடு கால்மாடு புரியாதபடி செய்து வைப்பார்கள். அதனையும் அறியவேண்டும். தமிழறியும் பெருமாள் நக்கீரருக்குக் கட்டில் அமைத்தபோது கால்மாடு தலைமாடு புரியாமையால் அதனைக்கண்டுபிடித்துப் பின் அமர்ந்தார்கள். வெறும் படிப்பு மாத்திரம் இருந்தால் போதாது. இத்தகைய அறிவும் இருக்கவேண்டும் என்று தமிழறியும் பெருமாள் முன்னமேயே எதிர்பார்த்திருக்கிறார்.

இவ்வாறே மருவு நடக்கும் காலங்களில் செய்யும் விசித்திரங்களுக்கு அளவே இல்லை. எழுத இஷ்டமிருந்தாலும் காகிதமும் நேரமும் இடந்தரவில்லை. ஒவ்வொன்றிலும் பரீட்சை செய்வது போல தனது மாப்பிள்ளைக்கு எங்கெந்த விஷயத்தில் குறைவிருக்கிறதோ அதனை விளக்கிக் கற்றுக்கொடுப்பார்கள். அறிவு நிறைந்த மாப்பிள்ளையாக இருக்கவேண்டும் என்ற எண்ணமே தவிர அவமானப்படுத்த வேண்டுமென்பதல்ல.

தற்காலம் கிடைக்கும் மாப்பிள்ளைகளிடத்தில் வேடிக்கை பேச்சிப் பேசினால் அதற்கே தாங்காமல் தன் வீடு திரும்பிவிடுகிறார்கள். கோபம் வந்துவிடுகிறது. சகிக்கும் ஆற்றல் இல்லை. தான் தோற்றாலும் அந்தத் தோல்வியிலேயும் கேலிக்கை காண்பிக்கும் நுண்ணறிவு இருக்கவேண்டும். பொறுமையும் சாந்தமும் மனிதனின் உயர்ந்த குணங்களாகும்.

ஒன்றும் தெரியாத பிள்ளையாக இருந்தால் பலர் சொல்லியனுப்புவது வழக்கமுண்டு. அப்படியே ஒரு தாய் பிள்ளைக்கு

அப்பா! காலம் கஷ்டகாலம், இலையிலே இடும் உணவுப் பொருள்களை எறிந்துவிடாதே; சுத்தமாகச் சாப்பிட வேண்டுமென்று சொல்லியனுப்பினளாம்.

சிறிய கிராமம், பதார்த்தம் கிடைக்கவில்லை. முருங்கைக்காய்ச் சாம்பார் வைத்து, வாழைப்பிஞ்சு அவியல் செய்து சாப்பாடு படைத்தார்களாம். மாப்பிள்ளை இலையில் முதல் அகப்பையில் இரண்டு முருங்கைக்காய்த் துண்டு விழுந்துவிட்டது. அதை எப்படிச் சாப்பிடுவதென்று யோசித்தான். தொட்டுப்பார்த்தான், கடினமாக இருந்தது. தாய் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

ஆகவே ஒரு முருங்கைத் துண்டை வாயிலே வைத்து நன்ருக மென்ருன் அது மசியவில்லை. எப்படியோ விழுங்கிவிட்டான். இரண்டாவதை எடுத்து வாயில் வைத்தான் ஒருபுறமாக ஒதுங்கி இருந்து பார்த்துக்கொண்டிருந்த மாமியார் நமது மாப்பிள்ளைக்கு இந்தக் காயின்மீது அதிகப் பிரியம்போலிருக்கிறதென்று எண்ணி ஓடிவந்து ஒரு அகப்பை முருங்கைக்காய்த் துண்டுகளை வாரி இலையிலிட்டாள். இதைக்கண்டதும் மாப்பிள்ளை அழ ஆரம்பித்தான்.

எல்லாரும் ஓடிவந்து என்ன காரணமென்று கேட்டபோது எங்களம்மா இலையிலிடும் பொருள்களைச் சேதம் செய்யாமல் சாப்பிடச் சொன்னார்கள். அதன்படியே ஒரு துண்டுக்கு இவ்வளவு பாடுபட்டு உள்ளுக்கு விழுங்கினேன். இத்தனை துண்டுகளை எப்படிச் சாப்பிடுவேன் என்ருனும். அப்படியே ஒரு சிலர் நல்ல பொருள்களைக் கழித்துவிட்டுக் கழிக்கக்கூடியதைத் தின்பதைப் பார்க்கிருேம்.

ஆனல், கூடச்சென்ற தோழிமாப்பிள்ளை கெட்டிக்காரனுக இருந்தால் சொல்லிக்கொடுப்பான். அவனும் சோற்ருளாக இருந்தால் என்னதான் நிகழாது. ஒரு மாப்பிள்ளை மாமியார் வீட்டிற்குச் சென்றிருந்தான். வைத்தியர் கேட்டபடி வைத்தியத்திற்கு ஒரு முயலைக் கொண்டுவந்து கூடையில் கவிழ்த்து வைத்திருந்தார்கள். யாகாவாராயினும் நா காக்க என்று சொன்னதை மறந்து அடக்கமின்றி கூடைக்குள் இருப்பது என்ன என்று மாப்பிள்ளை தனது மைத்துனனைக் கேட்டான்.

அதற்கு அவன் முயல் என்று கூறினன். அதனேடு விட்டிருக்கலாம். வெள்ளறிவு தன்னை விளக்கிவிடும் என்றபடி காது தினை எடுக்கிறது. ஒரு இறகு பிடுங்கிக் கொடுங்கள் என்று கேட்டான். உடனே மைத்துனன் கை காட்டிச் சிரித்து, பேஷ் முயல் தெரியாதா ? என்று பரிகாசம் செய்யத் தொடங்கினன். தோழி மாப்பிள்ளை அவனைவிட புத்திசாலி. உடும்பு என்று நினைத்துக் கொண்டு இறகு கேட்டார் என்ருன். உடும்புக்கு இறகு உண்டா என்று மீண்டும் அதிகமாகச் சிரிக்க ஆரம்பித்தார்களாம்.

இதனல் என்ன தெரிகிறதென்ருல் படிப்பு மாத்திரம் இருந்தால் போதாது. உலக அனுபவம் முதலியனவும் இருக்க வேண்டு

மென்றும் எல்லாம் சிறிதளவாகிலும் தெரிந்திருந்தால் வாழ்க்கையில் சோர்வின்றி குடும்பத்தை ஆளமுடியுமென்றுந்தான் கருத்து.

ஆகவே விருந்து உண்பது நமக்குக் குறைந்த சக்தியை நிரப்பிக்கொள்ளும் பொருட்டேயாம். உடலை மாத்திரம் பெருக்க வைத்துக் கொள்ளுவதல்ல. உலக அநுபவம் நன்றாகத் தெரிந்தால்தான் ஆண்டவனை யடைய நினைப்புத்தோன்றும். அதற்காகவே இந்த இன்பவாழ்க்கை என்று நிறுத்துகிறேன்.

——(o)——

"நீலச் சுழலழகி"

(திரு. இடைசை—சின்னு.)

முன்னுரை

உலகச் சூழ்நிலை இன்று பெரும் நெருக்கடியில் ஆழ்ந்து தத்தளிக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியின் முன்னேற்றம் மக்களை அழிவுப்பாதைக்கு இழுத்துச் செல்கிறது. எங்கேயோ பரிசோதனைக்காக வெடித்திடும் குண்டுகளின் அணுசக்தி வானத்தில் பரவி, மேகத்தில் கலந்து, பல திக்குகளில் பரவி, பல நாடுகளில் கதிரியக்க மழையாகப் பொழிகிறது. மழையின் மூலம் (தண்ணீர் பாய்ச்சி) வளரும் பயிரில் அணுசக்தியும் வளர்ந்து, உணவிலும் கலந்து மக்களை அழித்திடுகிறது எனச் சிறந்த விஞ்ஞான அறிஞர்கள் எச்சரிக்கை மூலம் அறிவித்திருக்கிறார்கள். கடலில் வாழும் மீனிலும் கதிரியக்கம் பரவி, உண்போரையும் தாக்குகிறது எனப் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறோம். நம்மைப் பேணி காக்கும் தாய்மார்கள் உடலிலும், அணுசக்தி பரவி, கருச்சிதைவு, அங்கஹீனம் முதலிய கொடிய உபபாதைகளை ஏற்படுத்துகிறதாம். இந்நிலை என்று மாறுமோ? விஞ்ஞான வளர்ச்சியை, அழிவுப் பாதைக்குப் பயன்படுத்தாமல், ஆக்க வழிக்குப் பயன்படுத்தும் நிலை என்று வந்திடுமோ?

அன்று ஒருநாள் மக்களை நேரடியாக அழித்திட்டார் அசோகர். அவர் வாழ்வு நிலைகளைப் பாருங்கள்.

தான் அரசாள வேண்டும் என்னும் பேராவலால், தன் தமையன்மார்கள் 99 பேரைக் கொன்று குருதி வெள்ளத்திலே அரசைக் கைப்பற்றிய கொடுங்கோலன் அசோகர் கலிங்கப் போரிலே படுகொலைபுரிய ஆரம்பித்தார். குற்றுயிராக, குருதியிலே துவண்ட மாந்தரினங்களை மன்னர் கண்முன் காட்டினாள் மாமேதை நீலச்சுழலழகி என்பாள். மக்கள் படும் துயர்களை மாளாது எடுத்துரைத்தாள். புனிதமயமான புத்தரின் அன்பு வழிதனைப் புகட்டினாள்.

அம்மாது தரும் அழகிய கருத்துக்களைக் கைக்கொண்டு நல்வழியில் அரசாளப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார் அசோகர்.

இனிப் போர்செய்வதில்லை என்னும் முடிவோடு தம்மை நல்வழிக்கு உயிர்ப்பித்த மாமேதை, நிலாவை மணந்து கொண்டு, அறம் கண்டு, மக்கள் நல்வாழ்வு வாழ வழிகண்டு, நல்லாட்சி நடாத்தினர்.

மண்ணாசைப் பிடித்து, மக்களை அழிவுப்பாதைக்கு இழுத்துச் செல்லும் உலக வல்லரசுகளின் பேராசை நிலையை, சிந்தித்துப் பார்த்துக் கொண்டு, கீழ் வரும் நிகழ்ச்சி சித்திரத்தைப் படியுங்கள்.

அந்தி சாயும் நேரம். முகில் சிரித்து முறுவலித்தது. தென்றல் தவழ்ந்து தென்திசையேகியது. 'சில்'லென வீசிய இளங்காற்று பாடலிபுர மக்களுக்குச் சிலிர்ப்பை யூட்டியது. மழைவருமோ என மகிழ்ச்சியோடு வானத்தை நோக்கினர் மக்கள் குழாம். மழை வருகிறது எனக்கட்டியங் கூறுவது போல், பறவையினங்கள் வியூகம் வகுத்து சாரி சாரியாய்ப் பறந்தன.

தொடங்கிய மழை, துவம்சம் செய்தாற்போல் பொழிந்து, மகத சாம்ராஜ்யத்தையே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. மழை செய்த கோரத்தினால் வீடிழந்த குடிமக்கள்கூட வையவில்லை வானத்தை. இரண்டு வருடமாக, மகத ராஜ்யத்தில் மழையே இல்லை. மழையில்லையேல் தன் வாழ்வு நிலையில்லை என வருந்திய குடிமக்கள், மழை செய்த கோரத்தாண்டவத்தைக்கூட வரவேற்றனர். மழை தரும் நிலைதான் வயற்புற மக்களை வாழ வைக்கிறது. இரவை நிம்மதியோடு கழித்தனர்; பெரு நிலக்கிழாரும் சிறு நிலக்கிழாரும், ஏனைய குடிமக்களும்.

பொழுது புலர, புல்லினங்கள் ஆர்ப்பரிக்க, பட்சி ஜாலங்கள் தத்தம் கீதமிசைக்க, செங்கதிரோன் உதித்தெழுந்தான். உதித்தெழுந்த ஆதவனுக்கு உற்சாகத்துடன் வணக்கம் செலுத்தி விட்டு உழவர்கள் காடேகினர். உள்ளம் உவகை பொங்க உழுதனர். அவர்களின் உள்ளக்கிளர்ச்சிதான் என்னே!

பாடல்கள் வெளிப்படுகிறது.

"புறம்புநிலத்தில் மாடுகட்டி பொழுதுசாய நெல்விளைச்ச
புதுமை தெரியுமா? கண்ணே! புதுமை தெரியுமா?"

"பொலிவுதரும் காளைநீ......புதுமையின்பம் காணக்கிடக்க
நெல்விளைச்ச புதுமையைக் கேட்பது என்னே? என்னே?"

. . . .

அழகிய தெம்மாங்கு பாடல்களைக் கலா உணர்ச்சியோடு, சுவைத்து, ரசித்துக்கொண்டே, வயற்புறத்தை ஒட்டிய பாதையோடு மெல்லெனநடந்து தம்புரவியைத் தட்டிக்கொடுத்து துரிதப்படுத்தினர் அசோகர்.

மழையினால் ஏற்பட்ட ஆரவாரத்தையும், மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கும் நிலையையும் விடிவு நேரத்தில் காணச்சென்ற

அசோகர் தம் உளநிலை மறந்து, உழவர்கள் நிலையிலேயே உற்சாகத்தோடு சுற்றிச் சுற்றி வந்தார்.

திடுமென ஒரு நினைவு மனக்கண்முன் திரையிடத் தான், வெண் புரவியைத் துரிதப்படுத்தினர். புரவி புயல் காற்றுப்போல் பறந்தது.

' ஐய்யா, அய்யா '' என்ற குரல்கேட்டு திடுமென குதிரையை நிறுத்தினர் வேந்தர் அசோகர்.

"யாரம்மா நீ? ஏன் அழைத்தாய்" என வினவினர்.

"அய்யா, அய்யா! ஒரு சிரிய உதவி செய்யவேண்டும். இந்தப் பாதையிலே இன்னும் கொஞ்ச தூரம் சென்ருல் ராஜபாட்டை வழி பிரிகிற . கிழக்கேயும் ஒரு வழி பிரிகிறது. கிழக்கே பிரியும் வழியில் 6 கல் தொலைவில் பூ மண்டபம் என்னும் கிராமம் இருக்கிறது. அங்கு நீரோடை எனப் பெயர்படைத்த சிற்ருறு ஒன்று ஓடுகிறது. ஆற்றின் மத்தியில் ஒரு நெடிதுயர்ந்த மரம் ஒன்றின் உச்சித் தளத்திலே, குழம்புபோன்ற நிலையில் ஒரு மூலிகை இருக்கிறது. அம்மூலிகையில் இரண்டு சொட்டு எடுத்து இக்குவளையிலே இட்டுத் தரவேண்டும். மிக மிக அவசரம். உதவிசெய்யுங்கள். புண்ணியமாய் இருக்கும். என் தந்தையும் பிழைத்திடுவார். அய்யா, அய்யா;'' எனவேண்டி நின்ருள் ஒரு யௌவனப் பெண்.

"உன் தந்தைக்கு என்னம்மா''?

"கொடிய நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். இந்த மூலிகையைக் கொடுத்தால் பிழைத்திடுவார்''

"அம்மா! நான் வழிப்போக்கன் அல்ல. ஆட்சிபுரியும் அவைக்குழு அதிகாரி நான் இப்பொழுது அவசர நிமித்தம் மிக வேகமாகச் செல்லவேண்டியவன். இந்நிலையில் உனக்கு உதவி புரிவது சாத்தியமில்லை. வருகிறேனம்மா'' ....

"அய்யா, நீர் யாராயிருந்தாலென்ன? இச்சிறிய உதவிடைக் கூடவா செய்யக்கூடாது ..... அதுவும் அவைக்குழு அதிகாரியாக இருக்கும் நீர்'' ....

"அம்மா! முடியாது. வழியைவிடு''

"ஐயோ! என் தந்தை இறந்து விடுவார். ஐயோ! என அலறினள் அப்பெண்.

"அம்மா! நான் இந்நாட்டு மன்னன் அசோகன். அரசாங்க விஷயமாக, அவசரமாக ஆலோசனை நடத்த வேண்டியிருக்கிறது. நான் சென்று, வேண்டுமானல் ஒரு பணியாளனை அனுப்புகிறேன். என்னல் இந்நிலையில் உதவிபுரிய இயலாது''.

"கோலோச்சும் கோமகனுகிய நீர் நிகழ்த்தும் உரை இது தானு? உம்மால் இயலாத ஒரு உதவி, உம் பணியாளனு ஆற்றப் போகிருன் ..... என் தந்தை செத்துமடிய வேண்டியதுதானு!

"ஆமாம். சாகவேண்டியதுதான்" எனச் சஞ்சலம் கிஞ்சித்தும் இல்லாமல் பகன்றார் அசோகர்.

"மன்னா! மன்னா!! மாசற்ற மாண்புமிக்கவர் என மதித்தேன். மண்ணில்துவளும் புழுபடும் துயர்கூடக் காணச்சகியார் எம்கோமான் என இறுமாந்திருந்தேன். அரசே! நீர் இன்று என் தந்தை சாகட்டும் என மொழிந்தீர். சாகட்டும்......சாகட்டும்......இறவாதார் யார்? இறந்து பட்டொழியட்டும். கவலையில்லை. ஆனால் எம் மன்னனாகிய உம் புகழ் இகழப்படத்தக்க முறையிலே—நெறியின்றி, நேர்மையின்றி, நீதியின்றி, நீர்கூறிய சொல்லால்—தேய்கிறது." மன்னா! நின் புகழுக்கு இழுக்கு. நேர்மைக்குச் சாவுமணி. நீதிக்குச் சவக்குழி."

"மாசுபடைத்த மதிமுகத்தோய்! சிற்றிடையாள் என சிங்கநாதம் எழுப்பவேண்டாம்."

"பெண்மையின் பேராபிமானம் என்ன என்பதைச் சந்தர்ப்பம் வரும்போது காட்டுகிறேன். இன்று இந்த இளம் வெப்ப நிலையிலே என் தந்தை சாகட்டும் எனக்கூறி நின்றீர். நான் எந்த நிலையிலாவது உமக்கு......புத்தி புகட்டுகின்றேன் போய்வா மன்னா!"

"புத்தி புகட்டுகின்றாயா?" கோபத்தை அடக்கிக்கொண்டு கேட்டார் அசோகர்.

"ஆம் மன்னா! சரியான சந்தர்ப்பத்தில் வருகிறேன்."

"அறியாச் சிறுமி நீ......".

"அறிந்து கூறும் உம் நிலைகண்டு பரிதாபப் படுகிறேன். பெண் என்றால் என்ன என்பதை நீர் போகத்தில் கண்டிருக்கலாம். அடிமைத் தொழிலிலே நீர் பார்த்திருக்கலாம். ஆனால் தன்மானம் படைத்த வீரப்பெண்ணின் இரத்த எழுச்சி எந்நிலைப்பட்டது என்பதை நீவிர் அறிந்திருக்க மாட்டீர்.

என்னை இப்பொழுது வார்த்தையால், ஒரே ஒரு சொற்றொடரால் வதைத்துவிட்டீர். நான் தனிப்பட்டவள். அக்கறையில்லை. ஆயின் பரந்த சாம்ராஜ்ய சக்ராதிபதி இந்நிலை எய்யக்கூடாது. சமயத்தில் உமக்கு நல்வழி சொல்லி, நலமிகு நல்லாட்சி நடாத்த இச்சிறுமி உபயோகப்படுவாள்.

மகராஜ்!.........பெண் வெகுண்டெழும்போது பேதையாகி விடுவாள் என ஐயப்பாடுவேண்டாம்.

பெண் பேதையும் அல்ல, போதைதரும் பொருளும் அல்ல—புத்தியுள்ள பெண்பாவாய்—எனப் புகழ்பாட நினையும் நாள் வரத்தான் செய்யும்.

வேந்தே! வேதனையின் துயரத்தில் வெந்து பேசவில்லை. சுய நினைவோடு, சொந்த புத்தியோடுதான் பேசுகிறேன். எனக்குத்

துயரிழைத்தீர். பச்சாத்தாபம்கூட காட்டவில்லை. ஆனால் நான் உம்மீது இரக்கப்படுகிறேன். உம் நிலைகண்டு வருந்துகிறேன். இந்தப் பூவையை—மன்னிக்கவேண்டும் அரசே!—புத்தி புகட்டு வாள். சென்று வாருங்கள் பேரரசே!!

நீர்மல்கும் கண்களைத் துடைத்தவாறு நகர்ந்தாள் அந்த யௌவனப் பெண். அவள் பெயர்தான் நீலச்சுழலழகி. பெயரை யொத்த கண்களும் பேரழகும் படைத்த எழில் நகைச் செல்வி யவள். இளம் வயதினள்தான் ஆனால் முதியோர்கள்போன்று அறிவுத்திறம் படைத்த அழகுப் பதுமையாக விளங்கினாள்.

அசோகர், நீலாவின் வீரம் செறிந்த அழகுப் பேச்சிலே, அறிவுத்திடலிலே, தன்னைக் குத்திக் காட்டியதைக்கூட மறந்து... ......தம் அவசர நிலையும் உணர்ந்து......தம் வழியேகினார்.

* * * *

காலமெனும் வேலை கடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நாள் கழிவும் உலகில் என்னென்ன நிகழ்ச்சியை ஏற்படுத்துகிறது. இன்பமும், துன்பமும், ஆசையும், பேராசையும் ஏன்தான் இறை வன் மக்களுக்கு அளித்திட்டானோ?

மண்ணாசை பிடித்த மகாராஜாக்களுக்கு மக்களைப் பற்றிய கவலையேது? மண்ணாசை வெறி மக்களை அல்லவா மாளவைக் கிறது. ஆண்டவன் இரண்டே முறை தான் சிரிக்கிறான். ஒன்று தன்னுடைய உடைமைகளைத் தனக்கே சொந்தம் என்று என்னும் போது; மற்றொன்று தன்னால் ஆக்கப்பட்டது என்று கூறும் போது.

ஆசையும் அளித்து நிராசையாக வாழவேண்டும் என்று நினைத்திடும் ஆண்டவனின் திருவிளையாடல்கள் தான் என்னே!

மகத ராஜ்யத்திற்கும் கலிங்க நாட்டிற்கும் போர்மூளும் செய்தி மக்களுக்கு வேதனையை மூட்டியது. இளம் வீரர்களுக்கு இச்செய்தி புத்துணர்ச்சியை ஊட்டியது.

போர் முரசு அதிருகிறது. குதிரை நடமாட்டம் அதிகரிக் கிறது. சக்ரவர்த்தி அசோகர் போருக்குப் புறப்பட்டுவிட்டார் கலிங்கத்தை நோக்கி.

போர் ஆரம்பமாகியது. கடும் எதிர்ப்பு. கலிங்க நாட்டுக் கட்டிளங்காளைகளும், மகதநாட்டு மாவீரர்களும், எதிர்த்து நின்று மாபோர் புரிந்தார்கள். மகத வீரர்களின் போர் வலிமைக்குக் கலிங்க நாட்டான் தாளாமல் புறமுதுகிட்டு ஓடினான்.

வெற்றிப் புன்னகையுடன் வேந்தர் அசோகர் தம் பாசறை யேகினார். ஆதவன் அடிவானத்தில் அமுந்திட, அமுதஒளி பரப்பத் திங்கள் எழுந்திட்டான். பூரணச் சந்திரனின் பொன்னொளி அன்று புதுமைக் கோலத்துடன் காட்சியளித்தது. நிலவு தரும் நிர்மல மான வேளை. மதுவை அருந்திய அசோகர், வெற்றிப் புன்னகை

மிளிரும் நிலவின் பேரெழிலை ஆனந்தப் பரவசமாக ரசித்துக் கொண்டே படுக்கையில் அயர்ந்தார்.

"புத்தம் சரணம் கச்சாமி
புத்தர் சங்கம் கச்சாமி"

குரல்கேட்டு அயர்ந்த நிலையிலிருந்து விழிப்பெய்தினர் அசோகர். சுற்றுப்புரத்தே பார்த்தார். தூரத்தே வெண் துகிலணிந்து ஒரு மாது நிற்பதைக் காணலுற்ருர். சிறிது நகர்ந்தவாறு "யாரம்மா நீ" என்று வினவினர்

"நான் புத்த பிக்ஷுணி" என்ருள் அம்மாது. "ஓகோ!...... சரி......இங்கு ஏனம்மா வந்தாய்? அதுவும் இந்நேரத்தில்?"

"மன்ன! போர்க்கோலங்களைப் புகழும் நிலையிலாழ்ந்த தங்களைக் காண நாடிவந்தேன். அரசே! உம்மைப் புகழ்பாட வரவில்லை. போரினல் மக்கள் படும் துயரத்தை எடுத்துரைக்க வந்தேன். போர்செய்த கோரத்தைப் பாருங்கள். துயர்பட்டு, மக்கள் இறந்து பட்டொழிவதைக் காணுங்கள்.

போருக்குப் போகும் தம் காதல் தெய்வத்தை ஆரத்தி எடுத்துத் திலகமிட்டு, வாள்கொடுத்து, முகமன் பேசி, வழி அனுப்பிய ஏந்திழையார்கள்-தம் மணளர்கள் இறந்தார்கள் எனக் கேள்விப்பட்டு-இந்த இரவு நேரத்திலே ஏக்கமிட்டு, நடையில்லாமல், அன்னதுவண்டு விழுந்து, தம் துணைவரைத் தேடுகின்ற துயர்படைத்த பெண்ணினங்களைப் பாருங்கள்.

அரசே! சற்று வாருங்கள். அதோ அங்கே பாருங்கள். மதம் பிடித்த களிருேடு மாபோர் புரிந்த மகதவீரர்கள், ஒரு குவளைத் தண்ணீருக்காக, ஏங்கித்தவித்து, அம்மா, அம்மா என்று அலறித் துடித்து, இறந்து இறுதி நிலைகாணும் எண்ணிறந்த தியாகசீலர்களை எண்ணிப்பாருங்கள்.

மோகன எழில் படைத்த மகதமங்கை, மகரயாழிலே, மதுர கீதமிசைக்கவேண்டிய நேரத்திலே—தன் வதனம் முகர்ந்த நேர்த்தியானவன் மண்ணெடு சாய்ந்தான் எனக் கேள்விப்பட்டு-ஓடோடியும் வந்து தம் காதற்றிருவழகனேடு வீரசொர்க்கம் அடைய, அடையாளம் காணமல் ஒரு பெண் தேடுகிருள்........ தேடுகிருள்.

அதோ அங்கே பாருங்கள். கொள்ளையின்பம் கொடுத்த கோமகன் குருதியிழாழ்ந்திருப்பதைக் கண்டு, அத்தான் — என அலறி நிலைகுலைந்து அடியற்ற மரம்போல் சாய்வதை அன்பு கூர்ந்து கவனியுங்கள்.

அதர்மம் புரிந்துவிட்டீர் அரசே; அதர்மம் அதர்மம் புரிந்து விட்டீர். குற்றம் சூழ்ந்துவிட்டது.

மன்ன! அங்கே பாருங்கள் கலிங்கக்காளைகளை. உங்களுக்காக, உங்கள் நாடுபிடிக்கும் திட்டத்திற்காக, ஒவ்வொருவராக

இறந்து, மகத சாம்ராஜ்யம் விரிவடைய இடம் தருகின்றனர். இருநாட்டு வீரர்களும் ஏராளமாக இறந்திருக்கிருர்கள். அவர்கள் வாழ்வை வதைத்துவிட்டீரே! அவர்களின் மனைவி, மக்களின் கதி என்ன? நீரா நலம்பேணும் நாயகன்? நின் கொற்றம் இதுதானு? மன்னு! நீர்செய்த கொடுமையைப் பாரும். போர் தேவைதானு பேரரசே! . . . . போர் தேவைதானு? கண்ணீர் சிந்தினுர் அசோகர். மேலும் தொடர்ந்தாள் புத்த பிக்ஷுணி.

"போர் தேவைதான் மன்னனின் புகழுக்கு. ஆனல் மக்கள் அல்லவா மாய்ந்து சாய்கின்றனர். கொல்லாமை இன்பம்பூ.., கோடியின்பம் தரும் என்று புத்தர் இதைத்தான் வற்புறுத்தினுர், அவர்காட்டிய அறம், தர்மம், இன்னேரன்ன பல நல்ல கொள் கைகளைக் கடைப்பிடித்து இப்பரந்த உலகையே உம் கொடைக் குள் கொண்டுவரலாமே!

கொற்றம்வாழ, உம் ஆட்சி நல்லதொரு அன்பு சாம்ராஜ்ய மாகத் திகழ, மக்கள் ஹிம்சையின்றி வாழவேண்டும். அஹிம்சா தர்மத்திற்கு ஆதர்ச புருஷராக நீங்கள் அமையவேண்டும். கள்ள மில்லா உள்ளத்தோடு, கவலையின்றி மக்கள் வாழ வழிவேண்டும்.

நேரின்பமயமான வாழ்வை நடத்த, நாட்டிலே சமதர்ம நல் லாட்சி நடைபெற்ருகவேண்டும்.

இதைத்தான் மக்கள் வேண்டுவது. எங்கள் சத்சங்கத்தின் நோக்கமும் இதுதான். புத்தர் பெருமான் போதித்த புனிதமய மான கொள்கைகளின் அடிப்படைத் தத்துவமும் இதுவேதான்.

கண்ணீர் சிந்திய அசோகர், விழிப்படைந்தவராக, "பெண் ணே! நீ . . . ."

"நீலச்சுழலழகிதான். நீள் வெப்ப நிலையிலே உங்களிடம் உதவி கேட்டவள்தான்."

"நீலா! நன்ருக உன் நினைவு ஞாபகம் வருகிறது. அன்று உனக்கு உதவிசெய்ய மறுத்த எனக்கு இன்று உயர்ந்த கருத்துக் களை என் உள்ளத்தே பதிய வத்திட்டாய். உத்தமி நீ . . . . உயர்ந்த நன்னேக்கு உடையவளாகத் திகழ்கிருய். எனது அன்புப் பெண்ணே! இரவுதரும் இன்ப வெள்ளத்திலே, என் இதயத்தைக் கவ்வியிருந்த இருளை அகற்றினுய். புனிதமான அன்பு வழிதனைப் புகட்டினுய். உன்னுடைய மொழிகள் என்னுடைய வாழ்வில் புதுமையைப் புகுத்துகிறது.

இனிப் போர் செய்வதில்லை. கத்தியைத் தொடேன். கயமை யைப் போக்கினேன். இன்புக் கடலெனும் ஆழப்பெருக்கிலே நீந்தி அமுதமொழி கைக்கொண்டு, அரசாளப் போகிறேன். புத்தர் வழிதனைப் போற்றிப் புகழ்பாடப் போகிறேன்.

அன்புப் பெண்ணே! நீ உதவி செய்யமாட்டாயா? வழி தனைக் கூறினுய் வகை வகையாய். மொழிதனைப் பகன்ருய் முதி

யோர்களின் அறிவு நிலைப்பெற்று. எழில்தனைப்பெற்ற நீ—என்னோடு இணைந்து—ஏன் நாம் புத்தர் மொழிகளைப் பூவுலகிற்குப் பரப்பமுடியாது ?

இதழ் அவிழ, எழில்தனை முகமதில் காட்டி, குறும்புச் சிரிப்பை ஈந்தாள் நீலா.

பெண் சிறினுல் தாங்கமுடியது. சிரித்தாளே—?

முடிவுரை

கொடுங்கோலனுக விளங்கிய அசோகர் நீலச்சுழலழகியை மணந்துகொண்டு, அவள் தரும் வழிதனைக் கடைப்பிடித்து, அன்பு மயமான ஆனந்த சமதர்ம நல்லாட்சியை நடத்தினுர். நற்போதனைகள் பொறிக்கப்பட்ட பெரிய பெரிய ஸ்தூபிகளை நிலைநிறுத்தினுர். தன் மகன் மகேந்திரனைக் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பி புத்த மதக் கொள்கைகளைப் பரப்பினுர்.

அந்த அன்பு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த அசோகரது தர்ம சக்கரம் தான் இன்று நம் தேசிய மூவர்ணக் கொடிகளில் பட்டொளி வீசிப் பறந்துகாட்டுகிறது.

அன்று வீரப்பெண்ணொருத்தியின் நல்வழிப் பேச்சால் அசோகர் மனமாற்றம் அடைந்தார்.

இன்று நம் பாரதத்தின் தவப்புதல்வர் பண்டித ஜவஹர்லால் நேருவின் நல்லுரையால் உலக வல்லரசுகள் மனமாற்றம் அடைந்து அணுசக்தியை ஆக்க வழிக்குப் பயன்படுத்துவார்களா ? உலகத் தாய்மார்களின் உள்ளங்களிலிருந்து உலக வல்லரசுகள் நல்ல பெயர் எடுப்பார்களா ?

——(o)——

பரமன் பண்பாளன் அல்லன் !

(எழிலன் – காட்டுமன்னுர்குடி)

பண்டைய காலத்தில், பைந்தமிழ் நாட்டை முத்தமிழ் வேந்தர் முறைபட ஆண்ட அந்த காலத்தில், ஓர் நாள் "இல்லையெமக் கீடு என்று உலகினில் பாடு" என்ற சொல் பொருள்கேற்ப இருமாந்து பெருமையுடன் வாழ்ந்த தமிழர் வீதியொன்றில் ; வெய்யிலோன் வெம்மையில் வெந்தவண்ணம் ஒரு கையிலே ஏடும் மற்ருெரு கையிலே எழுத்தாணியுடனும் "நெற்றிக்கண் உடையோன் ஆயினும் குற்றம் குற்றமே" என்ற நக்கீரன் வழிவந்த வேந்தன் ஒருவன் சென்றுகொண்டிருந்தான்.

அதுபோது அன்னுர் சென்றுகொண்டிருந்த வீதியின் மறுங்கில் அமைந்த வீடுகளின் ஒன்றிலிருந்து அழுகுறலும் அதை தொடர்ந்து சாவுக்குறிய நெய்தற்பறையும் ஒலிமுழங்கின. இந்த ஒலி தாழ்வதுமட்டும்கூட பொறுத்தில்லை ஒலிவந்த வீட்டின் எதிர் வீட்டினின்றும் வாழ்க்கை ஒப்பந்த வொலி எழுந்துவந்து புலவர்

செவியில் புகுந்தது. இதனை நோக்குற்ற நம் கவிஞர், ஒலிகள் எழுப்பிய உட்கருத்துக்களையும், அதனால் விளைவில் உள்ள வேறு பாட்டையும் நினைவில் நிழற்படம்போல் ஒன்றன்பின் ஒன்றாக நினைவு படுத்தி பார்க்கின்றார்.

இந்நிகழ்ச்சிக்கு அக்கவிஞர் உள்ளத்திலே ஓர் புத்துணர்ச்சியை ஊட்டி கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது அக்காட்சி. சிந்தனையாளனான நம் முதல்வர் சிந்திக்கலானான். சமுதாய அடிப்படையில், மக்களின் வாழ்க்கை தரத்தில் இப்பேதாபேதம் ஏன் அமையப்பெற்றது. இந்த அமைப்பை அதாவது ஒரு தரத்தார் துயரத்தையும், மற்றவர் இன்பத்தையும் ஏற்கும் இந்த அநீதிவழி ஆக்கியவன் யார். "ஆண்டவன் படைப்பில் ஆகுமோ வேற்றுமை" என்ற பெருமைமிகு உரிமைச்சொல் நினைவில் வரவே, பிரம்மன் என்ற இறைவன்தான் மக்களை உயர்த்தியும், தாழ்த்தியும், துன்பத்தில் சிலரையும் இன்பத்தில் சிலரையும், வாழ்க்கை தரத்தில் ஆண்டான் அடிமையென்றும், கூடுதலில் மகிழ்ச்சியையும் பிறிதலில் நெகிழ்ச்சியையும் இயக்குவிக்கின்றான் என்பது உண்மையாயின் அவன் மக்களினும் உயர்ந்தவனல்லன். கொடியவருள் ஒருவனாவான். அமைப்புக் கர்த்தாவை அத்துடன்மட்டும் விட்டுவிட ஆசைப்படவில்லை அப்புலவன். இன்னும் ஒரு படி மேல்சென்று நோன்பில் தொழும் பண்பாலன் (இறைவன்) அல்லன் என்றும் விளைப்பட கூறுகின்றார்.

கருத்துக்கள் வார்த்தைகளாக வடிக்கப்பட்டு, ஒன்றுசேர்ந்த ஓர் வாக்கிய வடிவில் அதுவும் கவிதை உருவில் அமைகின்றது. உடனே வலது கரத்திலே இருந்த எழுத்தாணியின் துணைக் கொண்டு இடது கரத்திலே ஏந்திய ஓலை அடுக்கில் கருத்தை பொறுத்தி காவியம் ஆக்கி செல்கின்றார். அப்படி காவியமாக்கியதில் ஒரு பகுதியை இங்கே குறிப்பிட ஆசைப்படுகின்றேன்,

"ஓரில் நெய்தல் கறங்க ஓர்இல்
ஈர்ந்தண் முழுவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பணிவார் பறைப்பப்
படைத்தோன் மன்ற அப்பண் பிலாளன்!"

பாட்டை............படித்தபின் பாவைப்படைத்த பண்பாலனை (புலவர் பெருந்தகையை) பார்க்க விரும்புகின்ற நம் புருவத்தின்கீழ் அமைந்த மணிகள். கண்களால் காணமுடியவில்லையே என்ற ஏக்கமும் நமக்கு துக்கத்தை உள்ளத்தில் ஏற்படுத்தினாலும் அப்பெருங் கவிஞனின் உடலைதான் அழிக்க முடிந்ததே தவிர விட்டுச்சென்ற பாக்களையும், பக்குடுக்கை நன்கணியார் என்ற பெரும்பேரையும் அழிக்கமுடியாத காலனின் சக்தியின்மையை நினைந்து நினைந்து உள்ளப் பூரிப்பும் புத்துணர்ச்சியும் பெருவோமாக. வாழ்க அப்புலவனின் புதுமைக் கருத்துக்கள். வழிபடுவோம், வணங்கச்செய்வோம் அப்பாவான பெருந்தகையை.

எந்த நாளோ?

விண்ணுயர்ந்த வேங்கடத்தை வடக்காய்ப் பெற்று
மண்ணினுயர் குமரியையே தெற்காய் கொண்டு
மேன்மைமிகு கடல்களையே மேல்கீழ் கொண்டு
பன்னரிய பொருளீட்டும் பண்பார் நாட்டில்
கடல்சார்ந்த நெய்தல்நிலம் கவினத் தந்த
கடல்வளத்திற் படுபொருளிவ் வவனிக் கீந்து
அறம்புரிந்து அல்லலெல்லாம் அகற்றும் நின்சீர்
பிறர்கூறக் கேட்டுவக்கும் நாள் எந்நாளோ?

என்னருமை இனத்தவர்தாம்
எல்லோரும் கலைபயின்று
பண்புமிகும் பகுத்தறிவால்
பாசத்தால் நேசத்தால்
நிகரில்லா நீல்கடல்போல்
நிலையான வாழ்வுபெற்று
இன்புற்றார் என்றுமற்றோர்
இசைத்திடலும் எந்நாளோ?

பன்னரும் கலைகளெல்லாம் பயின்றுளார் பர்வதர்தாம்
தென்னகத்தில் தண்ணிலொப்பு தேடினுமில்லை யென்றே
தேனினும் இன்சொல்லெம்மை தேடியே செவியில்வந்து
பாயும்நாள் எந்தநாளோ பர்வதா பகருவாயே?

——(o)——

யார் பெற்ற செல்வம்!

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

19-வது சீன்

(நளினா வீடு)

(மோகனும் நளினாவும் பேசிக்கொண்டிருக்கின்றனர்)

மோகன் :—என்ன நளினா! நேற்று ஆண்டு விழாவிலே போடு போடுன்னு போட்டுத் தள்ளிட்டானே அந்தப் பொடிப்பய!

நளினா :—யாருங்க? நம்ப ராஜாவா, இல்லே குமாரா?

மோ :—குமார் தான் நளினா! ஏன் இந்த ராஜா பயமட்டு மென்ன பொளபொளன்னு பொளந்துட்டான் போ! அதோடவா உன் டான்ஸும்..........

ந :—நல்லாயில்லையா மோகன்?

மோ :—அப்படின்னு சொல்ல மனம் வருமா நளினா! அதிருக் கட்டும்...... இந்த குமார் பய, நம்ப வலையிலே மாட்டுவானா?

ந :—செல்வந்தர் சிகரமே சிக்கித் தவிக்கும்போது இந்தக் குமார் என்ன? அவங்க குடும்பத்தையே மடக்கிட மாட்டேனா நான்!

மோ :—(சிரித்தபடி) அதனுல் தான் சொல்லிவைத்தேன்.

ந :—எள்ளி நகையாட இடமில்லே மோகன் !

மோ :—கைதேர்ந்த கள்ளியல்லவா நீ !

(என்று கன்னத்தைத் திருப்பிவிடல்)

ந :—போதுமே . . . . புள்ளிமானே என்று போற்றிப் புகழ்ந்துவிடாதீர்கள் ?

மோ :—ஆஹா ஹா ! அள்ளிவைக்க இடமில்லே நளினு !

ந :—ஏன் பள்ளியறை இருக்கும்போது இடமில்லே என்கிறீர்களே ?

மோ :—என்ன பள்ளி அறையா ?

ந :—ஆமாம் மோகன் அள்ளிவைக்க இடமில்லே என்றதற்கு ஏன் நம் பள்ளிக்கூட அறை இருக்குதேன்னு சொன்னேன். நீங்க என்னன்னு எதையோ நினேச்சிக்கிட்டு ஏடாகூடமா பேசுறீங்க ?

மோ :—ஓஹோ ! டபுளயிடியா தடுமாறுதா ? போகட்டும் அந்தப் பயல் குமாரை நீ எப்படியாவது சரி பண்ணிட்டே அப்புறம் நீ. நீதான் !

ந :—ம்......ம்......பிறகு சொல்வீர்கள். இந்த நளினுவைப் பற்றி !

மோ :—பார்க்கத்தானே போறேன் !

ந :—இவ்வளவு நாள் பழகியுமா ?

மோ :—தெம்புடன் தான் பேசுகிருய். இதோபார் நளினு. உன்னே நம்பி வாழும் இம்மோகனுக்கு . . . .

ந :—வழிதேடத்தானே வலேவீசப் போகிறேன். கவலேப் படாதீர்கள் மோகன். கவலேப்படாதீர்கள்.

மோ :—அப்படி நான் கவலேப் படுவதாயிருந்தால் கோவில் குளங்களேக் கண்ட இடங்களில் கும்பிடுபோட்டுட்டு வந்துகிட்டுல்ல இருப்பேன்.

ந :—பேஷ் ! ஸ்பீச் ஏகப்பிரமாதம் ! மோகன் என்னேப்பற்றி புகழ்ந்தது போதும் இனி சும்மாயிருங்கள் !

மோ :—ஏனப்படி சொல்லுகிருய் நளினு ?

ந :—ஏனு ? பிறகு பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தங்கம் வாங்க வேண்டாமா ?

மோ :—இப்போ அவ்வளவு ஈசியா வாங்கமுடியாது. சுங்க வரியுடன் பொங்கவரியும் புதுசா போட்டுடுவாங்க நளினு ! ம் . . . . அதோபார் ராஜாவின் கார் சப்தம் மாதிரி இருக்கு.

ந :—ஆமாம் மோகன் ஓல்டு மாடல் ஒன்னுன் நம்பர் கிரீன் கலர் கார் ! எஸ் அதுவேதான்.

மோ :—சரி சரி . . . . அவன் வந்தா சர்ருன்னு உள்ளே தான் வருவான். நான் போறேன்.

(என்று சொல்லியபடி எழுந்துபோதல் அச்சமயம்
ராஜா உள்ளே வருதல்)

ந :—வாட் ராஜா ஹலோ ! இப்படி உட்காருங்கள். (கிட்டே வந்து நின்று) ஆமாம் இவ்வளவு நேரமாக எங்கே சென்றிருந்தீர்கள் ராஜா !

ராஜா :— அர்ஜண்ட் வேலையாக வெகு தூரம் போயிருந்தேன் நளினு ! எங்கே மோகன் ?

ந :—யாரையோ பார்த்துவிட்டு வருகிறேனென்று போயிருக்கிருர் வந்துடுவார் !

ரா :—வெரிகுட்! எங்கே இப்படிவா ! ஆமாம் . . . . . நேற்று அபாரமா ஆடிவிட்டாயே ?

ந :—ஆட்டமெல்லாம் ஆளை மயக்குவதற்குத் தானே ராஜா !

(என்று சொல்லியபடி கிளாசில் பாட்டிலிலிருந்து எடுத்து
ஊற்றிக் கொடுத்தபடி)

ந :—ம் . . . . . இந்தக் கனி ரசத்தைப் பருகுங்களன்பரே !

ரா :—(கையில் வாங்கிக் குடித்தபடி) ஆஹா ! ஹா ! என்ன இனிப்பு என்ன இனிப்பு ! ம் . . . . . என்னைப்போலுள்ள இளங்காளைகளுக்கு உன்னைப்போலுள்ள கடைக்கண் கட்டழகிகள் கசப்பை ஓர் கோப்பை நிறையக் கொடுத்தாலும் இனிப்பதென்னவோ தனி மகிமைதான் நளினு !

ந :—ஓஹோ ! அப்படியா ? விஷயத்தை விளக்கமாகக் கூறுகிறீர்களே ?

ரா :—கூறுவதென்னயிருக்குடி ? விஷமே கொடுத்தாலும் தேவாமிர்தமல்லவா அது !

ந :—இப்படிப் பெண்களினத்தை ஆண்கள் போற்றிப் புகழ்வதினுல்தான் என்போன்ற இளங்கன்னிகைகள் திக்கற்றுத் தெருத் தெருவாய்ச் சுற்றுகின்றனர்.

ரா :—(சிரித்தபடி) அவர்களின் மடத்தன்மைக்கு ஆண்களை நோவதில் என்ன பயன் நளினு ?

ந :—பட்டுக்கொள்ளாதவர்கள் போல் பேசுகிறீர்களே. பெண்களின் கற்புக் கெடுவதற்கு முக்கிய காரணகர்த்தா ஆண்கள் தானென்பதை அறியாததா தாங்கள் ?

ரா :—வேடிக்கையான வினுவிடை நளினு ! கன்னியர்களின் கடைக்கண் வீச்சுக்குப் பலியாகி எத்தனையோ குடும்பங்கள் இப்பாரத நாட்டிலே பரிதவிக்கிறது தெரியுமா ? இப்பாவையர்களின் மோகத்தால் தன் வீட்டிலுள்ள பத்தினிமார்களைப் பழி பாவத்திற்கும் அஞ்சாமல் இம்சைபுரியும் இளங்காளைகள் இருக்கத்தான் செய்கிருர்கள். தெரியாமலா சித்தர்கள் சொல்லியிருக்கிருர்கள் சேலைகட்டிய மாதரை நம்பாதே என்று.

ந :—பித்தர்கள்! போகட்டும் .... தாங்கள்மட்டும் அதற்கு விதிவிலக்கா?

ரா :—எத்தனையோ காரணம் இருக்கும் இல்லையா?

ந :—அத்தனைக்கும், இந்த நளினு ஆடவேண்டியவள் தானே. ம்......காரியம் கைகூடினுல்......?

ரா :—என் கண்ணுட்டிக்குக் கழுத்தில் காசுமாலை! வனிதா மணிக்கு வைரமாலை! என் நளினுவுக்குத் தேகம் பூரா ஜொலி ஜொலின்னு ஜொலிக்காதா? (என்று கிட்ட இழுத்து தலையைத் தடவியபடி முத்தமிடப்போதல்).

ந :—ராஜா மணப்பந்தல்போட்டு என்னை மயங்க வைக்கிறீர்களா?

ரா :—நளினு! பொய்ப்பந்தல் போடுவதற்கு இப்புலிப்பட்டி ஜமீன்தார் மகனை எண்ணுதே, அப்பொய்ப் பந்தலுக்குக் கால் நடுபவன் இவனல்ல. நீ இன்னும் என்னைப்பற்றி நன்ருகப் புரிந்து கொள்ளவில்லை யென்பது தெரிகிறது. நளினு! ஓர் உதாரணம் கூறுகிறேன் கேள்! நெடுந்தொலைவில் இருப்பவர்களுக்கு நாடக அரங்கின் மேடைமேல் நடக்கும் காட்சிகளை ஏதோ ஓரிரு உருவம் நிற்பதாக உணரமுடியுமே தவிர, நடிப்பின் சுவையை நன்கு அனுபவிக்க முடியாதல்லவா? அதுபோல நீயும் ......

ந :—நினைக்கவில்லையன்பரே! தாங்கள் சொல்லியபடி எல்லா ஏற்பாடுகளையும் செய்துவருகிரும். இனி அந்தக் குமாரை......

ரா :—எப்படியாவது உன் வலையில் சிக்கவைத்து விட வேண்டும்!

.:—பிறகு சொல்லுவீர்கள்! இந்த நளினுவின் செயல்களை. சரி வாருங்கள் சாப்பிட.

(எழுந்து இருவரும் போதல்)

20-வது சீன்

(செல்வந்தர் செங்கல்வராய பக்தர் வீடு)

(பர்வதா ஜன்னலருகில் உட்கார்ந்து சோகமுடனிருத்தல் அச்சமயம் ஒருவர் பாடியபடி வருதல்)

சாது :—(ஒரு அடி பாடிமுடிந்ததும்.)

அசரீரி :—(வசனம்) நங்காய் நளிவுருதே! வீணில் வருந்திப் பயனில்லை. அஹ்ஹஹ்ஹா. . . . . . . ம் . . . . பேதைப் பெண்ணே! தக்க பருவத்தின் இனிமையை இளமை நாடுவது இயற்கைதானே! இதற்காகக் கவலைப்படுவதா?

பர்வதா :—நன்ருயிருக்கிறது வக்காளத்து? அப்படியானுல் என் இளமை என்ன ஆவது?

சாது :—(ஒரு அடி பாடிமுடிந்ததும்.)

அச :—(வசனம்) பெண்பேதாய்! உற்றவன் ஒருவன் உண்டென்று எண்ணி ஏமாந்தாய் ஆனதால், உன்னைப் பெற்றோர் போல்போற்றி வளர்க்கும் உற்றார் சொற்படி தட்டாமல் நடப்பதே மேலல்லவா ?

பர் :—(ஏளனமாகச் சிரித்துவிட்டு) கொற்றவன்போல் உற்ற துணைவன் ராஜா எனக்கிருக்க என் பெற்றோர் சொற்படி மற்றொருவரை மணம்புரிவது குற்றமாகாதா ?

சாது :—(ஒரு அடி பாடிமுடிந்ததும்)

அச :—(வசனம்) எது குற்றம்? அன்புக்காகக் கண்ணை மூடிக்கொண்டு பாழுங்கிணற்றில் விழுவதா? பர்வதா! உற்ற துணையை இழந்துவிட்ட பிறகு கொற்றவனை நினைத்துப் புலம்புவது தகுமா?

பர் :—ஏன் தகாது? பெண்கள் இனத்திற்கே சாபக்கேடான காதல் பாதைதானே அது என்கிறாயா ?

சாது :—(ஒரு அடி பாடிமுடிந்ததும்)

அச :—(வசனம்) இதற்காக நீ வியாகூலப்பட்டு யாது பயன்? பக்குவமாக நீ யிருக்கத்தக்க இடமல்லவா உன் தந்தை நிச்சயித்த இடம்! வீணில் மனத்தை அலட்டிக்கொள்ளாதேபோ எழுந்திரு! ம்......யோசிக்காதே போ ....

பர் :—யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? காதலித்த என் அத்தானை ....

சாது :—(ஒரு அடி பாடல் பாடிமுடிந்ததும்)

அச :—கனவிலும் நினையாதே என்று உன் தந்தை நினைவுறுத்தியதை மறந்துவிட்டாயா? பர்வதா! நங்காய்! உன் அத்தானை மறந்துவிடு. உன் ஆசை ராஜாவை அடியோடு மறந்துவிடு!

பர் :—ஆ! மறப்பதா? பற்றியேற இடமின்றிக் காற்றில் தவித்துக் கொண்டிருக்கும் முல்லைக்கொடி அதனருகில் வளர்ந்திருக்கும் மாமரக்கிளை ஒன்றின்மீது படர்வது தகாதா ?

சாது :—(ஒரு அடி பாடிமுடிந்ததும்)

அர :—(வசனம்) தகாதென்று தர்க்கமாடவில்லை பர்வதா! மனித வாழ்க்கையை அனுசரித்து நடப்பதே மக்கள் செய்யவேண்டிய மனுநீதி என்பதை உணர்வாயா பர்வதா ?

பர் :—உணர்ந்தும் உன்மத்தவளானேன் என் வாழ்க்கையே ....

(என்று சொல்லிமுடிப்பதற்குள் தாயார் பங்கஜம் அங்குவந்து)

பங்கஜம் :—பர்வதா என்னம்மா யோசனை தலைவாரி பின்னிக்காமேகூட, சிலைபோல உட்கார்ந்திருக்கிறாயே? எழுந்திரம்மா !

(என்றதும் திரும்பிப்பார்த்த பர்வதா கண்களை இரண்டு கைகளாலேயும் மூடியபடி கோவென்று அழுதல்)

பங் :—அழாதேம்மா அழுது அழுது கண்ணிரண்டும் சிவந்து போயிருக்கு.

பர் :—அம்மா! நம் அப்பாவின் முடிவு அதுதானு?

பங் :—கண்ணே பர்வதா! அவர் பிடிவாதம் பிறவிக்குண மல்லவா? நம் பாராளுமன்றத்திலேகூட சட்ட திட்டங்களை மாற்றியமைக்க விதியுண்டு. உன் அப்பா போட்ட திட்டத்திலே எந்தவிதமான இடையூறும் இருக்கக் கூடாதம்மா! இதோ பார் நான் சொல்வதைக் கேளம்மா! அந்த வீவிங்பாக்ட்ரி பையன் குமாருக்குத் தான் என்னம்மா? நல்ல தங்கமான குணம்! நிறைய சொத்துயிருக்கு. ஏழையாயிருந்த குடும்பந்தான். எதோ கடவுளருளால் நல்ல நிலமையிலிருக்கிருர்கள். அந்தக் குமார் சிகாரம் போனவன்தான். தன் அறிவுத்திறனுல் தொழிலை விருத்திசெய்து ஏழை எளியவர்களுக்கு உதவி வருகிருனென்ருல் அதைவிட என்னம்மா வேண்டியிருக்கு.

பர் :—அதற்காக அத்தானை மறந்துவிடுவதாம்மா?

பங் :—அவன் செய்துவரும் அட்டூழியங்களைக் கேட்கக்கேட்க உன் தந்தைக்கு அவன்பேரில் அளவிட முடியாத கோபம் ஏற்படச் செய்கிறதம்மா என்னசெய்வது?

பர் :—ம்........,.......

(அச்சமயம் வேலைக்காரி நல்லுவருதல்)

நல்லு :—ஆமாம்மா! இனிக் கவலைப்பட்டுக் கண்ணீர் வடிப்பதில் பிரயோசனமில்லையம்மா!

பங் :—பார்த்தாயா பர்வதா ம்.,...சரி வா போவோம்!

(தொடரும்)

——(o)——

"தேசிங்கு ராஜன்"

(ஆக்கியோன் திரு. (கண்ணு) நா. அரங்கன், சின்னசிரகப்பாடி)

காட்சி 10

இடம் :—கோவில்
காலம் :—பிற்பகல்
உறுப்பினர்கள் :—இராணிபாய், (டெல்லி தளபதி பீம்சிங்கின் மகள்) காமினி (தோழி) தேசிங்கு, கோவில் அர்ச்சகர், காவலாளி 1, 2.

இராணிபாயும், அவள் தோழி காமினியும் கோவிலுக்குள் நுழைகின்றனர். கோவிலில் இருக்கும் அர்ச்சகரிடம், காமினி தன் கையில் இருக்கும் தேங்காய், பழத்தட்டைக் கொடுக்க, அர்ச்

சகர் அதை வாங்கி, பூசை செய்ய, இராணிபாய் அச்சமயம் பாட்டுப்பாடி ஆண்டவனை வழிபடுகிருள். பாடல் வரும் திக்கை நோக்கி வந்த தேசிங்கு, கோவிலிக்குள் நுழைகிருன். அச்சமயம் ஆண்டவனை வணங்கிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்ததும், தானும் வழிபடுகிருன். வழிபாடு முடிய, அர்ச்சகர் தேங்காய் பழத்தட்டைத் தோழி காமினியிடம் கொடுக்க, தோழி வாங்கிக் கொள்கிருள். பின் இருவரும் அவ்விடத்தினின்றும் அகல, அங்கு நிற்கும் ஆடவன் தேசிங்கை, இராணிபாய் பார்க்கிருள். அச் சமயம் தேசிங்கனும், இராணிபாயைப் பார்க்கிருன். இருவரும் வைத்த கண் வாங்காது ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். அச் சமயம்.

காமினி :—(இராணிபாயைப் பார்த்தவாறு) அம்மா! நாழி ஆகின்றது! செல்லலாமே?

காமினி சொல்லியது, அவள் செவியில் வீழாது போகவே மீண்டும்,

கா :—அம்மா! தங்களின் அப்பா, தங்களை எதிர்பார்த்த வண்ணம் இருப்பாரம்மா!

இரா :—(அது சமயம், தன் சுய நினைவு வந்தவாறு) ம்மூ என்ன!

கா :—நாழி ஆகின்றது! தங்களின் அப்பா...........

இரா :—ஆமாம்! ஆமாம்! மறந்தே போனேன்! சரி வா! போகலாம்! (என்றுகூறி, தன்தோழியுடன், தேசிங்கைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் போகிருள். இவர்கள் இருவரும் மறைந்ததும், தானும் கோவிலை விட்டு வெளியே போக நினைத்த பொழுது, இரு காவளாளிகள் பேசிய வண்ணம் வருகின்றனர். இந்தப் பேச்சின் சப்தத்தைக் கேட்ட தேசிங்கு, கோவிலின் ஓர் புறத்தே மறைகிருன்.) அது சமயம் இரு காவளாளிகளும் கோவிலின் முன் புற வாயலில் நின்று கொண்டு

கா 1:—அண்ணே! நம்ப அரசரை அவமதிச்சிப் பாட்டுப் பாடிய ரெண்டு பேரிலே, ஒருத்த சிக்கிக்கிட்டா! இன்னொருத் தந்தா............

கா 2:—தம்பி! அவனைப் பிடிக்காமே, நாம்போ அரண்மனை போகக்கூடாது!

கா 1:—போகக் கூடாதுதா! (என்று சொல்லி சிறிது யோசித்துப் பின் திடுமென,) அண்ணே! அண்ணே! ஒரு விஷயமில்லே!

கா 2:—என்ன தம்பி! அந்த விஷயம்!

கா 1:—இன்னிக்கு சாயந்திரமே, நம்ப ராசா அவனை விசாரிக்கப் போருருங்களா!

கா 2:—அப்படியா! தம்பி!

கா 1 :—ஆமண்ணே! ஆமா! அவசர விசாரணை என்று சொல்லி, இன்னிக்கே வைச்சிருக்காங்க! அங்கே போனா, இன்னொரு ஆளு பதுங்கி இருக்கிற இடத்தைச் சுலபமா தெரிஞ்சிக்களா!

கா 2 :—நல்ல யோசனை சொன்ன தம்பி! சரி வா போகலாம்! (என்று கூறி இருவரும் போக, பதுங்கி இருந்த தேசிங்கு செய்தி அறிந்து மிகக் கோபமாக)

தேசிங்கு:—என்ன! எனது முதல் நண்பன், முகம்மதிய வீரன் மகமத்கானைப் பிடித்து விட்டார்களா! பாதுஷாவே! ஆழம் அறியாமல் காலை விட்டு விட்டாய்! அது உன்னை ஆனந்தத்தில் வீழ்த்தும் என எண்ணாதே! அபாயத்தில் தான் வீழ்த்தும் என்பதை உன் விசாரணை மண்டபத்திலேயே பலர் அறிய விளக்குகிறேன். இதோ! இப்பொழுதே வந்து விட்டேன்! உனது ஆணவம், அகங்காரம் அனைத்தையும் போக்க! (என்று கூறி, தான் தங்கி இருக்கும் இடத்திற்குச் சென்று, இரண்டு உறை வாட்களை எடுத்துக் கொண்டு, வீராவேசமாக அரண்மனையின் விசாரணை மண்டபத்தை நோக்கிச் செல்கிறான்.)

காட்சி 11

இடம் :—அரண்மனையின் விசாரணை மண்டபம்

காலம் :—மாலை.

உறுப்பினர்கள் :—ஷா ஆலம், ராஜலிங்கபாபு. பீம் சிங், அரண்மனை ஆலோசகர்பலர், மக்கள் சிலர், மகமத், தேசிங்கு, காவலாளிகள் சிலர்.

அனைவரும் தத்தமக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்த வண்ணம் இருக்கின்றனர். காவலாளிகளும் தத்தமக்குரிய இடத்தில் நின்ற வண்ணம் இருக்கின்றனர். அதுசமயம் மகம்மத்தைக் குற்றவாளி கூண்டில் கொண்டுவந்து நிறுத்துகின்றனர். அச்சமயம் ராஜலிங்கபாபு மகம்மத்தைப் பார்த்து)

ராஜலிங்கபாபு :—(ஆசனத்தில் இருந்து எழுந்த வண்ணம்) நீ! எமது மன்னரைப்பற்றி . . . . . .

மகமத் :—தூற்றிப் பாடியதாகக் குற்றம் சாட்டப் பட்டு, குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறேன் இவ்விடத்தே!

ரா :—ஆம்!

மக :—உமது மன்னன் அடாது செய்யும் செயலையும், விடாது பேசும் தன்மையையும், படாது புரியும் போக்கினையும் தான் பதிகத்தின் மூலம் பாடப் பட்டதேயன்றி பிறிதொன்றுமில்லை.

ஷா :—(ஆசனத்தில் இருந்தே மிகக் கோபம் அடைந்தவனாய்) ஆ! என்ன திமிர்! எள்ளளவும் அச்சமின்றி என் முன்னாலேயே இவ்வளவு ஆண்மையுடன் பேச!

மக :—ஆண்மையுடன் பேசுவது ஆண்களுக்கு அழகு அரசே! திமிர் வாதம் பேசும் பழக்கம் நான் பிறந்தது முதல், இன்று வரை

என்றும் இருந்தது கிடையாது! உண்மை உரை, அச்சம் தவிர், ஆண்மையைக் கைக்கொள் என்கிற கொள்கைகளை மற வாது என்றென்றும் கடைப் பிடிப்பவன்!

ஷா :—கடைப் பிடிப்பாயடா கசடனே!

மக :—(கோபம் அடைந்தவனாய்) பாதுஷாவே! பார்த்துப் பேசும்! நான் யாரென்று அறியாது, அதிகாரத் தோரணையிலே, ஆணவத்தோடு பேசுகிறாய்! நான் இருப்பதோ செஞ்சி! ஆம் தெற்கே வெகு தூரம்! அதனை ஆண்டவர் எமது மன்னர் தரணி சிங்! அவரும் இங்குதான் இருக்கிறார்! அதுவும் உமது வசத்திலே! அவரது மெய்க்காப்பாளர் சையத்கானின் மகன் யான்! என் பெயர் மகம்மத்!

ஷா :—(சிறிது தணிந்து அன்பாக) மகம்மத்தா! முகம்மதி யனா! என் இனமா?

மக :—ஏன்! இனத்தைக் காட்டி இணங்க வைத்துவிடலாம் என எண்ணுகிறாயோ! பாதுஷாவே! உண்ட வீட்டிற்கு இரண் டகம் நினைக்கக் கூடியவர்கள் அல்ல எமது முன்னோர்கள்! உண் மையை உணர்ந்தவர்கள்! கடமையை மறவாதவர்கள்! கண்ணி யமே பெரிதென வாழ்ந்தவர்கள்! அப்படிப்பட்ட சந்ததியின் தோன்றல்தான் நான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! மேலும் செஞ்சியின் செல்வன் தேசிங்கனின் முதல் நண்பன்! எமது செஞ்சி மன்னர் தரணிசிங்கை விடுவித்துச் செல்லவே இங்கு வந்துள்ளோம்!

ஷா :—(கிண்டலாக) தேசிங்கனின் நண்பனோ? மகம்மத் என்ன சொன்னாய்? தரணிசிங்கை விடுவித்துச்செல்ல! (சிரிப்பு) செஞ்சியின் மன்னனை விடுவித்துச்செல்ல! (சிரிப்பு) பின் எங்கே அந்தப் பொடிப்பயல் தேசிங்கு! (என்றுகூறி சிரிக்கிறான்.)

மக :—சிரிக்காதே! பாதுஷாவே சிரிக்காதே! உன் சல்லாப சாம்ராஜ்யத்திற்குச் சாவுமணி அடிக்க, அதிவிரைவில் வந்துவிடு வான் எனது நண்பன் தேசிங்கன்! உன் குதிரையை அடக்கி, உன் கொட்டத்தையும் ஒடுக்கி, குறுநில மன்னர்களுக்கு எல்லாம் விடு தலை அளிப்பான் எனது நண்பன் தேசிங்கன்!

ஷா :—சாவுமணி அடிப்பான் எனது சல்லாப சாம்ராஜ்யத் திற்கு! (சிரிப்பு) அடக்குவான் எனது நீலவேணிக் குதிரையை! (சிரிப்பு) ஒடுக்குவான் எனது கொட்டத்தை! (சிரிப்பு) விடுவிப் பான் குறுநில மன்னர்களை! (சிரிப்பு) யார்! உனது நண்பன் தேசிங்கன்! (சிரிப்பு) (பின்கோபமாக) வரட்டும் பொடிப்பயல்! அவனையும் பிடித்து, உன்னுடன் சேர்த்து விலங்கிட்டு உங்கள் இருவரையும், அவன் அப்பனையும் ஆக மூவரையும் என் கண் குளிரச் சித்ரவதை செய்கிறேன்! பொடிப்பயல்! தேசிங்கன்! பொடிப்பயல்! (சிரிப்பு) (இதுசமயம் பெரும் சிரிப்புடன் தேசிங்கு தன் இரண்டு கரங்களிலும், இரண்டு உறை வாட்களைப் பிடித்த வாறு)

தேசிங்கு :—பொடிப்பயல்! பொல்லாத நினைப்பு! பாதுஷாவே! பொல்லாத நினைப்பு!

ஷா :—யார்! தேசிங்கனா!

தே :—ஆம்! தேசிங்கன்தான்! நீ எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொடிப்பயல் தேசிங்கன் தான்! செஞ்சியின் மன்னன் தரணிசிங்கின் மகன் தேசிங்கன் தான்!

ஷா :—(காவலாளிகளைப் பார்த்து) ஏன் நிற்கிறீர்கள்! இவனையும் பிடியுங்கள்! (என்றுகூற, காவலாளிகள் தேசிங்கனை நெருங்க, அச்சமயம் தேசிங்கு தன் கரங்களில் இருக்கும் கத்திகளை, சேவகர்களின் மார்புகளுக்கு நேரே நீட்டியவாரே)

தே :—தேசிங்கன்! அவரவர் நிற்கும் இடத்திலேயே நில்லுங்கள்! அமைதியான முறையிலே நில்லுங்கள்! அசையாப் பதுமை போல் நில்லுங்கள்! (என்றுகூற காவலாளிகள் அவ்வண்ணமே நின்றுவிடுகின்றனர். அச்சமயம் ஷா ஆலம்.)

ஷா :—என்ன! வெள்ளாட்டைக் கண்டு வேங்கைப் பயப்படுவதா? பாம்புக்குப் பயந்து கீரி பதுங்குவதா? கோழியைக் கண்டு நரி நடுங்குவதா?

தே :—எதைக் கண்டும் பயப்படவேண்டாம் போதுஷாவே பயப்படவேண்டாம்! (தன் கரங்களில் இருக்கும் கத்திக்களைக் காண்பித்தவாரே) என் கரங்களில் இருக்கும் இக்கத்திகளைக் கண்டால் வேங்கை மருண்டோடவேண்டும்! கீரி பதுங்கவேண்டும்! நரி நடுங்கவேண்டும்! (பின் நடந்துகொண்டே காவலாளிகளைப் பார்த்தவாரே) நீங்கள் நிற்கும் இடத்தினின்று ஓர் அடியாகிலும் எடுத்துவைத்தால், உமதுமது மனைகளையோ காணமுடியாது அல்லது உமதுமது மணவி மக்களையோ காணமுடியாது? சுருங்கக் கூறின் உமதுமது உயிர் உமதுமது உடலில் நில்லாது என்பது தான்! (பின் பாதுஷாவைப் பார்த்து) நேருக்குநேர் நின்று, போர் புரிய பலமில்லாது, ஓர் குதிரையின் உதவியால் குறுநில மன்னர்களை எல்லாம் கொடிய காராகிரகத்திலே அடைத்து அடக்கி ஆளும் பாதுஷாவே வணக்கம்! நின் அடாதுசெய்யும் செயலையும், விடாது பேசும் தன்மையையும், விடாது புரியும் போக்கினையும் பதிகத்தின் மூலம் பாடியதால் என்னைப் பிடிக்கமுடியாது எனது முதல் நண்பன் முகம்மதிய வீரன் மகம்மத்கானைப் பிடித்து இழுத்துவந்து, அவனது கைகளுக்கு விளங்கிட்டு குற்றவாளி எனக் குற்றம் சாற்றப்பட்டு, அவை நடுவே நிறுத்தி ஆணவப் போக்கிலே அரசோச்சி வரும் மன்னவனே வணக்கம்! (சிறிது கழித்து) பாதுஷாவே! இனி உன் சம்பம் பலிக்காது! உன் போக்கிரித் தனத்திற்கும், பொல்லாத பேச்சுக்கும், பிடிமானமற்ற செயலுக்கும் சாவுமணி அடிக்க செஞ்சியின் செல்வன் இந்தத் தேசிங்கன் வந்துவிட்டான்.......... (தொடரும்.)



BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE

RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,

262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.
PHONE No. 3687.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 மார்க்

அசல் ஆப்பீல், திராக்ஷ, மாதுளம், மாம்பழம்,
பழரசங்களினால் மெஷினில் தயார் செய்த
புரூட் ஸ்குவாஷ் (FRUIT SQUASHS)ம்,
ரெடிமிக்சர் **ரவா தோசை** பவுடரும்,
அப்பளம், வடாம், எல்லாவகை வற்றல்களும்
எங்களிடத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் & கோ.

ஸ்ரீ ராமபவான் பில்டிங்ஸ்

46, தம்புசெட்டி தெரு :: மதராஸ்-1.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1,